Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx Express
விரைவானது · பாதுகாப்பானது · நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone [illegible] 259,கே.கே.எஸ் [illegible] யாழ்ப்பாணம். T.P: 021 222 7835 Fax: [illegible] 7836 E.mail:thirumurugan5@lvcosmail.com
பலநோக்கு கூ. ச. முன்பாக 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் T.P: 021 222 7560 Fax:021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 02 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 04 (17.12.2004) வெள்ளிக்கிழமை இதழ்:78

## இந்திய–இலங்கை கூட்டுப்பயிற்சி சமாதான முயற்சியைப் பாதிக்கும்!

### கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை

(கிளிநொச்சி)

எமது கடற்படை அணிக்கு ஈடுகொடுக்கமுடியாத சிறிலங்கா கடற்படையானது எமது கடற்படையின் வலுவைக் குறைக்கும் நோக்குடன், இந்திய கடற்படையுடன் கூட்டுச் சேர்ந்து கடற் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கை - இந்திய கடற்படைகளின் கூட்டுப் பயிற்சியானது சமாதானத்தைப் பாதிக்கும் ஒரு நடவடிக்கை.

எமது அமைப்பில் கடற்புலிகளுக்கென தனியான பலம்பொருந்திய கடற்படை ஒன்றினை அமைப்பதற்கு பல வழிகளிலும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் மறவன் மாஸ்ரர் என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

சுகவீனம் காரணமாக சாவடைந்த கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசத்தின் மேலாளருமான லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் இறுதி அஞ்சலி நிகழ்விலும், வீரவணக்கக் கூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஆசிரியராக பணிபுரிந்த எமது ஆசான் மறவன் மாஸ்ரர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய–இலங்கை கூட்டுப்பயிற்சி மேற்குக் கடற் பரப்பில் ஆரம்பம்!



(கொழும்பு)

இந்திய கடலோர காவற்படையுடன் இணைந்து இலங்கைக் கடற்படையினர் நேற்று மேற்குக் கடற்பிராந்தியத்தில் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டனர்.

இலங்கைக் கடற்படைத்தரப்பில் சயுர என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல், ஜயசாகர என்ற போர்க்கப்பல், பீரங்கிப் படகு மற்றும் இரண்டு அதிவேக டோறா தாக்குதல் கப்பல்களும் சுமார் 450 கடற்படையினரும் பங்குகொண்டனர்.

இந்தியத் தரப்பில் ஆழ்கடல் ரோந்துக்கப்பல்களான துர்க்காபாய், தேஷ்முக் சரல் ஆகியனவும் கடற்பகுதி கண்காணிப்புவிவகாரம் மற்றும் செடெக் ஹெலிகொப்டர் ஆகியவற்றுடன் 200 காவற்படையினரும் பங்கேற்றனர்.

ஒப்பரேசன் எக்ஷத் என்ற பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கையில் பங்கேற்பதற்காக இந்தியக் கடலோரகாவற்படைஇயக்குநர் வைஷ் அட்மிரல் ஏ.கே.சிங் கொழும்பு வந்திருந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி சந்திரிகாவுடன் சொல்ஹெய்ம்

# மூன்று மணிநேரம் பேசியும் எந்த இணக்கமும் இல்லை!

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகாவுடன் நேற்று மூன்றுமணி நேரமாக நடத்திய பேச்சுக்களில் எந்த இணக்கப்பாடும் எட்டப்படாத நிலையில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றிரவே இந்தியா ஊடாக நோர்வேக்குத் திரும்பினார்.**

**இவர் ஒஸ்லோவில் நோர்வே வெளியுறவு அமைச்சரைச் சந்தித்த பின்னர் எதிர்வரும் 20 ஆம் திகதி லண்டனுக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசுவார் எனத் தெரியவருகிறது.**

**நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்த போதும் இறுதி நேரத்தில் இந்தச் சந்திப்பை ஜனாதிபதி சந்திரிகா இடைநிறுத்தினார்.** (12 ஆம் பக்கம் பார்க்க)

## இசை நிகழ்ச்சிக் குண்டுவெடிப்பு; ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

அண்மையில் கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் ஷாருக்கானின் இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து நேற்று கொழும்பு பஸ் நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைந்து செயற்பட்டு இலகுவாக அபிவிருத்தியை காணலாம்

### வடக்கு - கிழக்கு ஆளுநர்



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பல்ல. அவர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் மாகாணத்தின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை இலகுவாக மேற்கொள்ளமுடியும் என வடக்கு - கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று வடக்கு - கிழக்கு மாகாண தலைமையகத்தில் வடக்கு - கிழக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவாக நோர்வே செயற்படுகிறது

### பதில் கடிதத்தில் ஜே.வி.பி. அறிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி. செயற்படுகின்றதென அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்து தம்மை ஆச்சரியப்பட வைத்துள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மேற்படி மூன்று நாடுகளும் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு விளக்கமளிக்கும் வகையில் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா கையெழுத்திட்டு அவர்களுக்கு அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜே.வி.பியினதும், அது அரசாங்கத்துடன் இணைந்துள்ளநிலை தொடர்பாகவும் மிகப் பெரிய தவறான புரிந்துணர்வைக் கொண்டுள்ள உங்களின் குற்றச்சாட்டுக்கள் எமக்கு ஆச்சரியத்தைத் தந்துள்ளன.

எமது கட்சி நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மையான கட்சியாகும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டதே ஜனநாயகத்தை வரித்துக் கொண்டதனாலாகும். தேசியப் பிரச்சினைக்கு சட்டம், ஒழுங்கின்படி சமாதானத் தீர்வை எட்டுவதே எமது இலக்காகும்.

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை தொடர்ந்தும் மீறி வருகின்றனர். அனுசரணையாளர்களான நோர்வேயும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர். இதனை ஜே.வி.பி. மட்டும் கூறவில்லை. வேறும் பலர் கூறியுள்ளனர்.

சமாதான முயற்சிகள் மூலம் எட்டப்படும் இறுதித் தீர்வு தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அங்கம் வகிக்கும் பிர

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து, மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அறிவிப்பு

**மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட மீளக்குடியமர்தல் கொடுப்பனவாக ரூ.25000/= முழுமையாக வழங்கப்படாமையை ஆட்சேபித்து கடந்த இரு வாரமாகச் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சில குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் யாழ்.செயலகத்தின் முன் மறியல் போராட்டம் நடாத்திச் செயலக அன்றாடக் கருமங்களைச் செயற்படாமல் தடுத்தமை தொடர்பாக பொதுமக்களுக்கும், இவ்வாறு மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கும் பின்வரும் செய்தியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.**

22.02.2002 இல் அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மீளக்குடியமர்ந்த, மாதாந்த வருமானம் ரூ 2500ற்குக் குறைந்த குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் கொடுப்பனவாக ரூ 25000 அவர்களுடைய வங்கிக் கணக்கு மூலம் கொடுப்பனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக் கொடுப்பனவுக்கான நிதி அரசாங்கத்தினுடைய நிதி அல்ல. வெளிநாடுகளின் உதவியுடன் பெறப்படும் நிதி ஆகும். முக்கியமாக உலகவங்கி இதற்கான நிதியை வழங்குவதற்குச் சம்மதித்திருந்தது. இதன் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் 50,000 குடும்பங்கள் கடந்த மாதம் வரையில் மீளக்குடியமர்ந்திருக்கின்றார்கள். இவர்களில் 42,000 குடும்பங்களுக்கு இம் மீளக்குடியமர்தலுக்கான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என எம்மால் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 32,821 குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கான நிதி பெறுவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்பட்டன. இவற்றில் இதுவரை 28,942 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு எம்மால் செலவிடப்பட்ட நிதி ரூ 698 மில்லியன் ஆகும். இந்த நிதி யாழ்.மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்தக் குடும்பங்கள் மூலம் முதலிடப்பட்டுள்ளது. இதனை விட ஏறக்குறைய 6000 குடும்பங்களுக்குரிய கொடுப்பனவுகளுக்கான கையொப்பங்கள் பெறப்பட்டு இதற்கான நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் கையொப்பம் பெறப்பட்ட கால வரிசைக்கேற்ப இந்தக் கொடுப்பனவு செய்வதற்கு இச் செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி வருவதில் சில காலதாமதம் ஏற்பட்டுள்ளது. என்பதை மறுக்க முடியாது. எனினும் கடந்தவாரம் வடக்கு - கிழக்கு மாகாண சபையிலும், நிவாரண, புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சிலும் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் இந்த 7000 குடும்பங்களின் நிலைபற்றி என்னால் எடுத்துரைக்கப்பட்டு, இந்த 7000 குடும்பங்களுக்கும் இவ்வருட முடிவுக்குள் கொடுப்பனவு செய்வதற்கான நிதியை வழங்குவதற்கு கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதல் கட்டமாக 50 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. இதனைக் கால ஒழுங்கின் அடிப்படையில் 2000 குடும்பங்களுக் இவ் வாரத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதிக் குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் தற்போதுள்ள நிலையில் இவ் வருடத்திற்குள்ளேயே வழங்குவதற்கான முழு முயற்சிகளும் இந்தச் செயலகத்தினால் செய்யப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தினாலும், நிவாரண, புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் உத்தியோகத்தர்களினாலும் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் செயலகத்தின்முன் மறியல் போராட்டம் நடத்துவதினால் இக் கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்தும் என நான் நினைக்கவில்லை. அவ்வாறு மறியல் போராட்டம் செய்வதற்கு முன்வருபவர்கள் முன்னுரிமை ஒழுங்கின் நடைமுறையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

யுத்தத்தினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய புனர்வாழ்வு, நிவாரண, அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளை வருட இறுதியில் செய்துவரும் இந்தச் செயலகத்தை முடக்குவதன் மூலம் இந்தக் கொடுப்பனவுக்கான காலதாமதம் கூடிக்கொண்டு செல்லுமேதவிர வேறு வகையில் முன்னேற்றம் ஏற்படும் என நான் நினைக்கவில்லை.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் பொறுமையைக் கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை கொடுப்பனவு செய்யப்பட்ட முழு விபரமும் கீழே தரப்பட்டுள்ளது.

**2004 நவம்பர் மாதம் வரை**

| | பிரதேச செயலர்/ உ.அ.அதிபர் பிரிவு | இதுவரை மீளக்குடியமர்ந்தவர்களது மொத்த எண்ணிக்கை | நேர்காணல் முடிந்த குடும்பங்கள் | குடும்ப பதிவு அட்டை வழங்கப்பட்டவர்கள் | தகுதியானவர்களின் எண்ணிக்கை | இதுவரை கொடுப்பனவு வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | நெடுந்தீவு | 134 | 96 | 96 | 96 | 38 | 95000 |
| 02 | வேலணை | 1,965 | 1,873 | 1,632 | 1,632 | 1,116 | 26,97000 |
| 03 | ஊர்காவற்றுறை | 1,547 | 1,444 | 822 | 822 | 799 | 19,54000 |
| 04 | காரைநகர் | 1,351 | 1,316 | 1,232 | 1,325 | 993 | 24,82500 |
| 05 | யாழ்ப்பாணம் | 3,314 | 3,102 | 2,328 | 2,379 | 1,084 | 24,28000 |
| 06 | நல்லூர் | 3,368 | 3,122 | 2,533 | 2,533 | 1,228 | 29,45500 |
| 07 | சண்டிலிப்பாய் | 3,157 | 2,944 | 2,435 | 2,881 | 1,986 | 49,65000 |
| 08 | சங்கானை | 2,153 | 1,995 | 1,729 | 1,826 | 1,382 | 33,63500 |
| 09 | உடுவில் | 2,320 | 2,188 | 1,764 | 1,764 | 1,026 | 25,01500 |
| 10 | தெல்லிப்பளை | 1,417 | 1,351 | 870 | 1,068 | 853 | 21,32500 |
| 11 | கோப்பாய் | 2,901 | 2,686 | 2,405 | 2,673 | 2,230 | 55,21500 |
| 12 | தென்மராட்சி | 19,315 | 17,905 | 16,833 | 16,406 | 12,453 | 299,80500 |
| 13 | கரவெட்டி | 852 | 817 | 726 | 726 | 535 | 12,52000 |
| 14 | பருத்தித்துறை | 2,964 | 2,859 | 2,741 | 2,741 | 1,289 | 30,36000 |
| 15 | மருதங்கேணி | 3,491 | 3,482 | 3,265 | 3,265 | 1,930 | 44,45500 |
| | மொத்தம் | 50,249 | 47,180 | 41,411 | 42,137 | 28,942 | 698,00000 |

**செ.பத்மநாதன்**
*அரசாங்க அதிபர்.*
*யாழ்.மாவட்டம்.*

(C/3478)

## விடுமுறை தினங்களிலும் வியாபார நடவடிக்கைகள்

நத்தார் மற்றும் புதுவருடதினங்களை முன்னிட்டு அனைத்து வர்த்தக நிறுவனங்களும் நாளை முதல் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை சனி, ஞாயிறு மற்றும்போயாதினங்களிலும் திறக்கப்பட்டிருக்குமென யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

## நத்தார்தின விழா

காரைநகர் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு கிறிஸ்தவக் கழகம் நடாத்தும் நத்தார்தினவிழா நாளை காலை 8.30 மணிக்கு கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுகளைத் தொடர்ந்து நிலையச் சிறார்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது. (52)

## திருவெம்பாவை உற்சவம்

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயில் வருடாந்த மார்கழித் திருவெம்பாவை உற்சவம் நாளை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு இடம் பெறுவுள்ளது. (52)


**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.
பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த (குளிரூட்டப்பட்டது)
**அழகிய தீயே** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30.6.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 மட்டும்
ஆங்கிலப் படம் **HULK**
விரைவில்:- THE PASSION OF THE CHRIST
(இயேசு தேவரின் வாழ்வின் இறுதி 12 மணிநேரக் கதை.)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
ஸ்ரீகாந், சினேகா, நடித்த
**போஸ்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK - 3

**ராஜா** யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
சரத்குமார்,வடிவேலு, நிகிதா நடித்த
**சத்ரபதி** (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்

**நாகம்ஸ்** சுன்னாகம்
அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த
**அட்டகாசம்**
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
18 முதல்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதினவெளியீடான
அர்ஜின், சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த

**ஜெய் சூர்யா**
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா யாழ்.பெயின் காடன் - 326, K.K.S.றோட் யாழ்பாணம்


## பெருங்கதை படிப்பு

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி ஆலயத்தில் இன்று விசேட அபிஷேகமும் பெருங் கதைப் படிப்பும் இடம்பெறவுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி முதல் இந்த ஆலயத்தில் பிள்ளையார் கதைப்படிப்பு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது

## ஆன்மீகச் சொற்பொழிவு

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் 'மயிலேறிய வாகனா' என்னும் தலைப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் சிவதட்சணாமூர்த்தி சொற்பொழிவாற்றவுள்ளார். (14)


**சிறு விளம்பரம்**

**விற்பனைக்கு**

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வலம்புரிச் சங்கு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ் (மருந்துக்கடை), 76, பெரியகடை, யாழ்ப்பாணம். T.P.: 222 2912

**சினெ யாத்ரா - 2**
Award wining Sinhala Film Festival
விருது பெற்ற நான்கு சிங்கள திரைப்படங்கள்
திகதி
18.12.2004
மற்றும்
19.12.2004
நேரம்
மு.ப.10, 3.00 பி.ப
இடம்
கேட்போர் கூடம்,
யாழ்.பல நோக்குக் கூட்டுறவு சங்கம்,
கே.கே.எஸ் வீதி.
பிரவேசம் இலவசம்
திரிகோனே கலை மையம்
Trikone Art Centre
(C/3477)

**2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 02 - 11 - 1917



இறப்பு 09 - 01 - 2003

**அமரர் இராசா நாகம்மா**

திதி 17 - 12 - 2004

பாசத்தின் இருப்பிடமே – எம்
பண்பின் பிறப்பிடமே – எம்
அன்பின் நிறைவிடமே – நாம்
கலங்கி அழுகிறோம் – உங்களை
கண்ணீரில் தேடுகிறோம்

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
இரத்தினசிங்கம் லங்காதேவி
17/34 நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(C/3476)

# கருணாவின் தேச விரோதக் கும்பல் மாவீரரின் நெருப்பில் சாம்பலாகிவிட்டது

## மட்டு-அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

மாவீரர்களின் தியாக நெருப்பால் கருணாவின் தேச விரோதக் கும்பல் கருகி எரிந்து சாம்பலாகி விட்டது. கருகிய சாம்பல் உயிர் பெறமுடியாது என்பது தமிழர்களுக்குத் தெரியும்.

ஆனாலும் கருகிய சாம்பலுக்கு உயிர் கொடுக்கின்றனர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் வழங்கும் ஏற்பாட்டுக கூட்டம் நேற்று முன்தினம் திருக்கோவில பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற போது அந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் சங்கரி, நிர்வாகப் பொறுப்பாளர் முரளி, மற்றும் திருக்கோவில் பிரதேச செயலாளர் தவராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தற்பொழுது சிங்கள அரசு கருணா பெயரைப் பயன்படுத்தி பல கொலைகளைப் புரிந்து வருகின்றனர். அனைத்து தமிழ் மக்களும் இதை நன்கு புரிந்துள்ளனர். அதனாலேயே தமிழ்த் தேசியத்தை நம்பி கிராம சேவகர்கள், பிரதேச செயலாளர்கள், பொதுமக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வியாபார ஸ்தாபனங்கள், ஆகியன ஒன்றிணைந்து மாவீரர் தினத்தை சிறப்பாக நடத்தின. மாவீரர்களின் தியாகத்தை இந்த நிகழ்விலும் மதிக்கின்றோம். அவர்கள் எமது உரிமையைப் பெறவித்தானார்கள். அதற்காக எமது உரிமைகளை நாம் வென்றெடுக்க வேண்டும். தற்பொழுது இடம்பெறும் கொலைகளைப் புரிபவர்கள் கருணா குழுவுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கின்ற இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்பது எமக்குத் தெரியும்.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், தமிழ் மக்களையும் பிரிக்கின்ற செயல்களில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில திருக்கோவில் குமரி வித்தியாலயத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இராணுவத்தினர் தமிழ் பிரதே சங்களை அபிவிருத்தி செயய வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களைச் சேர்த்து தமிழ் மக்களின் அபிவிருத்திக்குழு என்று ஒன்றைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். அரசுக்கும், தமிழ் மக்களுக் கும் புரிந்துணர்வை ஏற்படுத்தும் முகமாக அவர்களுடைய செயற்பாடுகள் இருக்கின்றன.

சொந்த வாழ்விடத்தை, எமது தமிழ் மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்காத படையினர் எவ்வாறு அபிவிருத்தியைச் செய்யப் போகின்றார்கள். இவர்கள் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்க முற்படுகின்றார்கள். சிங்கள அரசும், சிங்கள இராணுவமும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பது தமிழர்களுக்குத் தெரியும்.

தமிழ் மக்களின் வாழ்விடங்களை அழித்தவர்கள் இவர்கள். தமிழீழத்தை வெறுத்தவர்கள் இவர்கள். இன்று சமாதானத்தை வலியுறுத்துகின்றனர். அப்படி இராணுவம் சமாதானத்தை விரும்புகின்றதென்றால் எங்கே பார்க்கலாம் அரசுக்கு பாரிய அழுத்தத்தைக் கொடுக்கட்டும்.

இவர்கள் போலி நாடகமாடுகின்றார்கள். தமிழ் மக்களுக்கு இராணுவத்தினர் அசௌகரியங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறாக தமிழ் மக்களுக்கு இராணுவம் கொடுக்கின்ற அசௌகரியங்கள் மீண்டும் சமாதா னத்தைக் குழப்புகின்ற செயலாகவே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## விமல் வீரவன்சவிடம் நஷ்டஈடு கோரி வழக்கு

### ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வின் போது, மேற்கொள்ளப்பட்ட கிரனைட் வீச்சுச் சம்பவத்துக்கும், ரவிகருணாநாயக்கவுக்கும் தொடர்பு இருப்பதாக ஜே.வி.பி தெரிவித்த உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுத் தொடர்பாக, நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க தெரிவித்தார்.

விமல் வீரவன்சவிடம் இருந்து ஆயிரம் கோடி ரூபா நஷ்டஈடு கோரி இந்த வழக்கைத் தாக்கல் செய்யப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பதில் பிரதம நீதியரசராக சிராணி பண்டாரநாயக்க

(கொழும்பு)

இலங்கையின் சட்டத்துறை வரலாற்றில் பெண் ஒருவர் பதில் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசரான கலாநிதி சிராணி பண்டாரநாயக்கவே பதில் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலமர்வொன்றில் கலந்து கொள்வதற்காக நீதியரசர் சரத் என் டி சில்வா வெளிநாடு சென்றுள்ள நிலையில் அவருக்குப் பதிலாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் சிராணி பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கலை நிகழ்ச்சியில் வீசப்பட்ட குண்டு இராணுவத்துக்குச் சொந்தமானது

(கொழும்பு)

கொழும்பில் இந்திய நட்சத்திரங்கள் கலந்து கொண்ட, கலை நிகழ்ச்சியில் வீசப்பட்ட கைக்குண்டு இலங்கை இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் கைக்குண்டு என அரச பகுப்பாய்வு அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

இராணுவத்தில் பயிற்றப்பட்ட ஒருவராலேயே இந்தக் குண்டு வீசப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் மீது பழிபோடுவதற்காக, ஆளும் கட்சியான சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ அல்லது அதன் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி.யோ இந்தச் சதி முயற்சியின் சூத்திரதாரிகளாக இருக்கலாம்.

இந்த சம்பவம் தொடர்பாக அன்றையதினம் இடம்பெற்ற வன்முறைகளின்போது, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட 12 பேர் உள்ளிட்ட, 40 பேரின் வாக்கு மூலங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு குற்றப் புலனாய்வுத்துறையினரிடம் தற்போ்து கையளிக்கப்படடுள்ளது.

## பொலநறுவையில் வெள்ளமீட்பில் ஈடுபட்ட பன்னிரண்டு சிப்பாய்களைக் காணவில்லை

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படை மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

சோமாவதி விகார புனித பிரதேச பகுதி முற்றாக வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது. 16 அடி வெள்ளம் இந்தப்பகுதியில் பாய்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் பகுதியிலுள்ள குடியிருப்பாளர்கள் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு அந்தப் பகுதியிலுள்ளோரை மீட்டுக் கொண்டுவரப் புறப்பட்ட கடற்படை வள்ளம் இதுவரை குறிப்பிட்ட இடத்தை வந்து சேரவில்லை. கடற்படை வள்ளத்துடனான வானொலி தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை தகவல் இல்லை.

வீமானப் படையின் ஹெலி கொப்டர் மற்றும் விமானங்களின் உதவியுடன் தேடும் பணிகள் தொடர்கின்றன.

## சமாதானத்தை விரைவுபடுத்தக் கோரி தொடர் மாநாடுகளை நடத்தத் திட்டம்

(கொழும்பு)

யுத்தத்துக்கு எதிரான தேசிய முன்னணி என்ற அமைப்பு சமாதான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது தொடர்பில் தொடர் மாநாடுகள் நடத்தப்படவுள்ளன.

பதின்மூன்று அமைப்புக்கள் இணைந்து உருவாக்கிய யுத்தத்துக்கு எதிரான தேசிய முன்னணி என்ற அமைப்பின் முதலாவது தேசிய மட்ட பிராந்திய மாநாடு - ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அநுராதபுரத்திலும் தொடர்ந்து, கொழும்பு சுகததாச உள்ளக அரங்கிலும் இடம்பெறவுள்ளன.

இந்த மாநாட்டின் மூலம் சமாதான நடவடிக்கைகளைத் துரிதப் படுத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க உள்ளதாக இந்த மாநாட்டின் பிரதம ஏற்பாட்டாளரான பேட்டி ரணவீரகே தெரிவித்தார்.

இதே சமயம் கடந்த இரு தசாப்த யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகத் தமிழில் வெளிவந்த படைப்புக்களை சிங்கள மொழியில் வெளியிடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் யுத்தத்தால் தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்களை, சிங்கள மக்களும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## திலக் மாரப்பன மீது ஒழுக்காற்று நடவடிக்கை



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய உறுப்பினரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான திலக் மாரப்பன மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

தற்போது சிறை வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்காவை தண்டனைக் காலம் முடியும் வரை சிறையில் வைத்திருக்க வேண்டும் என திலக் மாரப்பன வெளியிட்ட கருத்து தொடர்பாகவே அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியவுடன், இவர் மீது நடவடிக்கை எடுக்க கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மக்களின் தேவைகளை இனங்கண்டு பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்

### ரிரோன் பெர்னாண்டோ



(கொழும்பு)

வடகிழக்கில் கடந்த இருபது வருடங்களாகப் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை இனங்கண்டு, அவற்றைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என, புதிதாகப் பதவியேற்றுள்ள வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாகப் பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு - கிழக்கில் கடந்த இருபது வருடங்களாக யுத்தத்தால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா ஆளுநராக நியமித்துள்ளார். எனது ஆட்சிக் காலத்தில் வட- கிழக்கு மக்களின் தேவை கள் எவை என்பதை இனம்கண்டு அவற்றைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாகாணசபைக்குட்பட்ட திணைக்களங்களின் உறவுகளை வலுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இதன் மூலம் மக்களின் தேவைகள் இனம்கண்டு உரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப் பேன் எனத் தெரிவித்தார்.

(10) (04)

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - நுஆ புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்து

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தேசிய ஐக்கிய முன்னணியும் நேற்று முன்தினம் காலை புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்திட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் அதன் தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப்பும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உடன்பாடு குறித்து அரசாங்கத்தின் சமாதான செயலகம் மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கான சமாதான சபையை ஏற்படுத்துவது குறித்து, இருதரப்பினருக்கும் உடன்பாடு ஏற்பட்டதாகவும், எதிர்காலத்தில் பிரிந்து நிற்கும் முஸ்லிம் தரப்புக்களை ஒன்றாக இணைக்கும் பணியில் இருதரப்பினரும் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# பாகிஸ்தான் அணிக்கு எதிராக அவுஸ்ரேலியா 357 ஓட்டங்கள்



(பேர்த்)

பாகிஸ்தான் அணிக்கு எதிராக பேர்த்தில் நேற்று ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 8 விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்களைப் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட அவுஸ்ரேலியாவுக்கு அழைப்பு விடுத்தது.

இதையடுத்து லாங்கரும், ஹைடனும் களமிறங்கி ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்திலேயே அணியின் ஸ்கோர் 6 ஆக இருந்தபோது முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

ஒரே ஒரு பவுண்டரியை அடித்து 4 ஓட்டங்களுடன் இருந்த ஹைடன், அக்தர் வீசிய பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து, அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் களம் இறங்கினார். இவர் மூலம் அவுஸ்ரேலிய அணியின் ஸ்கோர் உயர்ந்துகொணடிருந்தபோது, முகமட் சமி வீசிய பந்தில் பொண்டிங் போல்டானார்.

54 பந்துகளில் இரண்டு பவுண்டரிகளுடன் 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பொண்டிங் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஸ்கோர் 56 ஆக இருந்தது.

இதனைத் தொடர்ந்து மார்ட்டின் களம் இறங்கியபோதும், ஒரேயொரு ஓட்டத்தை மட்டுமே பெற்றநிலையில் சமியின் பந்துவீச்சில் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நேரிட்டது.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்துகொண்டிருந்த அவுஸ்ரேலிய அணிக்கு நம்பிக்கையாக லாங்கர் மட்டுமே நின்றுகொண்டிருந்தபோது அவருக்கு ஜோடியாக டரன் லீமன் இணைந்துகொண்டார். ஆனால், அணியின் ஸ்கோர் 71 ஆக உயர்ந்தபோது லீமனின் விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது.

அவர் 8 பந்துகளில் இரண்டு பவுண்டரிகளுடன் 12 ஓட்டங்களைப் பெற்றநிலையில் இவரது விக்கெட்டை அக்தர் கைப்பற்றினார்.

தள்ளாடிக்கொண்டிருந்த அவுஸ்



ரேலிய அணியை தூக்கி நிறுத்துவாரென எதிர்பார்க்கப்பட்டபோதும் இளம் வீரரான கிளார்க் ஒரேயொரு ஓட்டத்துடன் வெளியேற நேரிட்டது. இவரது விக்கெட்டையும் அக்தரே கைப்பற்றினார்.

78 ஓட்டங்களை எடுப்பதற்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து தவித்த அவுஸ்ரேலிய அணிக்கு உயிர்ப்பூட்டும் வகையில் அடம் கில கிறிஸ்ட் களம் இறங்கினார்.

கில்கிறிஸ்ட் - லாங்கர் ஜோடி அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது.



ஸ்கோர் 230 ஆக உயரும் வரை அவுஸ்ரேலிய அணியை பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களால் அசைக்க முடியவில்லை. இந்த நிலையில்தான் 78 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 69 ஓட்டங்களைக் குவித்த கில்கிறிஸ்ட் ஆட்டமிழந்தார்.

கில்கிறிஸ்டை அப்துல் ரஸாக் போல்டாக்கினார். இதன்பின்னர் ஷேன் வோர்ன் ஏழாவது விக்கெட்டாக களம் இறங்கினார். அவரும் 12 ஓட்டங்களுடன் அப்துல் ரஸாக்கின் பந்துவீச்சில் தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

பின்னர், ஜிலெஸ்பி 24 ஓட்டங்களுடன் அக்தரால் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார். நேற்றுமாலை ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது, அவுஸ்ரேலிய அணி 8 விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடக்க ஆட்டக்காரர் லாங்கர் 181 ஓட்டங்களுடனும் கஸ்பரோவிச் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். 264 பந்துகளில் 18 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் லாங்கர் 181 ஓட்டங்களைப் பெற்றநிலையில் இருந்தார்.

# இன்று ஆரம்பமாகும் டெஸ்டில் இந்திய அணியில் மாற்றமில்லை

## பயிற்சியாளர் ஜோன் ரைட்



பங்களாதேஷ் அணிக்கு எதிராக இன்று ஆரம்பமாகவுள்ள 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் எந்த மாற்றமும் இல்லை என்று பயிற்சியாளர் ஜோன் ரைட் கூறினார்.

இந்திய - பங்களாதேஷ் அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்டகொங் நகரில் இன்று ஆரம்பமாவுள்ளது. இந்தப் போட்டிக்கான இந்திய வீரர்கள் நேற்றுமுன்தினத்திலிருந்து தீவிர பயிற்சி மேற்கொண்டனர்.

நடக்கவுள்ள போட்டிக்கான இந்திய அணியில் எந்த மாற்றமும் செயயப்படாது என்று பயிற்சியாளர் ஜோன் ரைட் ஆணித்தரமாகக் கூறிவிட்டார்.

இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறுகையில் -

டாக்கா டெஸ்ட் போட்டியில் இந்திய அணியிடம் இருந்து பங்களாதேஷ் நிறைய பாடம் கற்றிருக்கிறது. எனவே இந்தப் போட்டியில் பங்களாதேஷ் வீரர்கள் அதிக சவால கொடுக்கும் நோக்கில் வருவார்கள்.

எனவே எந்த வாய்ப்பையும் அவர்களுக்குக் கொடுக்கமுடியாது. இந்திய அணியில் வீரர்கள் மாற்றம் செய்யப்படுவதற்கான வாய்ப்பே கிடையாது.

வலுவான அணிகளுக்கு எதிராக கை.:.ப் மற்றும் முரளி கார்த்திக் ஆகியோர் சிறப்பாக ஆடினர். அவர்களுக்கே அணியில் இடம் கிடைப்பது சந்தேகம்தான்.

விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக்கின் ஆட்டம் திருப்தி அளிக்கிறது. ஆனால் அவர் இன்னும் துடுப்பாட்டத்தில் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும். சகீர்கான் முந்தைய போட்டியில் 75 ஓடடங்கள் எடுத்து உலக சாதனை படைத்திருந்தார்.

இதனால் அவருக்கு முன் வரிசையில் துடுப்பெடுத்தாட வாய்ப்புக் கொடுக்கப்படுமா என சிலர் கேட்கிறார்கள். முன் வரிசையில் ஆடும் இர்பான், ஹர்பஜன் மற்றும் கும்ளே ஆகியோரும் சில சமயங்களில் சாதித்து இருக்கிறார்கள். எனவே இதில் மாற்றம் செய்வதற்கான அவசியம் இல்லை என்றார்.




# உதைபந்தாட்ட ஆலோசகரும் மைதானத்திலேயே உயிரிழப்பு

இந்தியாவில் கோவாவைச் சேர்ந்த டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் அணியின் பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ ஜூனியர் மைதானத்தில் இறந்த சில தினங்களுக்குள் அணியின் உடற்தகுதி ஆலோசகர் லான்சி செகியூராவும் (வயது 48) மைதானத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பனாஜியில் கடந்த திங்கட்கிழமை கோவா மாநில தடகள அணிக்கு பயிற்சி அளித்துக்கொண்டிருந்தபோது கடுமையான மாரடைப்பு ஏற்பட்டு மைதானத்திலேயே அவர் வீழ்ந்துள்ளார்.

உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர், முன்னதாகவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தடகளப் பயிற்சியாளரான செகியூரா, கடந்த நான்கு ஆண்டுகளாக டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் அணியின் உடற்தகுதி ஆலோசகராகவும் இருந்து வந்துள்ளார்.

டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப்பின் பயிற்சியாளர் மற்றும் செயலாளர் அர்மாண்டோ கொலகோ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பெங்களூரில் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற .:.பெடரேஷன் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் கிறிஸ்டியானோ உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# சச்சினை விட கவாஸ்கருக்கு பந்துவீசுவது கடினமாம்!

## வசீம் அக்ரம் தெரிவிப்பு



(கொல்கத்தா)

சச்சினைவிட கவாஸ்கருக்கு பந்துவீசுவது கடினம் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனும், வேகப் பந்துவீச்சில் சாதனை நாயகனுமான வசீம் அக்ரம் இந்தியாவில் நீரிழிவு நோய் விழிப்புணர்வை உண்டாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து நோய் பற்றிய விழிப்புணர்வை அக்ரம் ஏற்படுத்தி வருகிறார். தற்போது கொல்கத்தாவில் இது பற்றிய ஊர்வலத்தில் அக்ரம் கலந்துகொண்டார்.

இதன் பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில் - இந்திய நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கரைக் காட்டிலும் கவாஸ்கருக்கு பந்து வீசுவது என்பது கடினமான காரியம். நான் தேர்வு செய்யும் உலக லெவன் அணியில் இந்த வீரர்கள் இருவருக்கும் எப்போதும் இடம் உண்டு.

இவர்கள் இருவரிடமும் நிறைய திறமைகள் இருக்கிறது. இருந்தாலும் என்னைப் பொறுத்தவரை கவாஸ்கர் கொஞ்சம் சிரமமான துடுப்பாட்ட வீரர் என்றே தோன்றுகிறது.

நான் சொன்னதற்கு சரியான காரணமும் இருக்கிறது. என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் கவாஸ்கரை நான் ஒருமுறைதான் ஆட்டம் இழக்கச் செய்துள்ளேன். மற்ற அனைத்து தடவையும் அவரின் ஆதிக்கம்தான் இருந்துள்ளது.

ஆனால், டெண்டுல்கருக்கு அதிகமாக பந்துவீசும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. 1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரு நாட்டுக்கும் இடையே டெஸ்ட் கிரிக்கெட் உறவு முறிந்து விட்டது.

இதனால் டெண்டுல்கரைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

14 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் இந்திய அணி பாகிஸ்தானில் ஆடியது. ஆனால் அப்போது நான் பாகிஸ்தான் அணியில் இடம்பிடிக்கவில்லை. இதுவும் டெண்டுல்கரைப் பற்றிய கணிப்புக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று தெரிவித்தார்.

# கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் முன்னேற்றம்!



(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் தர வரிசைப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் மீண்டும் முன்னிலை பெற்று வருகிறார்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், காயம் காரணமாக பல போட்டிகளில் விளையாடாமல் இருந்தார். பின்னர் மூன்று மாத இடைவெளிக்குப் பிறகு களம் இறங்கிய அவரால் அதிக ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை.

இதனால் சர்வதேச கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் 12 ஆவது இடத்திற்கு பின்தங்கினார். தற்போது பங்களாதேஷுக்கு எதிரான முதல் போட்டியில் 248 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் மீண்டும் சச்சின் முன்னேறி வருகின்றார்.

பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர் நிறுவனம் புதிய தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

இதில் சச்சின் ஆறாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இரண்டாவது இடத்திலிருந்த ஷேவாக் நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

பிறைன் லாரா (மேற்கிந்தியத் தீவுகள்), ஜக்கலிஸ் (தென்னாபிரிக்கா) இருவரும் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களில் உள்ளனர்.



முதலிடத்தை இந்திய வீரர் ராகுல் ராவிட் தக்க வைத்துள்ளார்.

இந்தியாவில் அதிக விக்கெட் வீழ்த்தியவரான அனில் கும்ளே பந்துவீச்சில் ஏழாவது இடத்தை பெற்றுள்ளார். ஹர்பஜன் எட்டாவது இடத்தை பெற்றுள்ளார். இங்கிலாந்தின் ஸ்ரீவ் ஹர்மிசன் தொடர்ந்தும் முதலிடத்தில் இருந்து வருகிறார்.



நியூசிலாந்து செல்லும் இலங்கை அணியின் தலைவர் அத்தப்பத்து பௌத்த பிக்குவிடம் ஆசி பெறுவதைக் காணலாம்.

# சஹஸ்ர தக்ஸலா திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகள் அபிவிருத்தி

(யாழ்ப்பாணம்)

மாவட்டத்துக்கு ஒன்று என்ற அடிப படையில், நாட்டிலுள்ள தேசிய பாட சாலைகள் தெரிவு செய்யப்பட்டு, தனியார் நிறுவன நிதியுதவிகளின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட வுள்ளதாக, கல்வி அமைச்சின் செய லாளர் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கு, நவீனப்படுத்தப் பட்ட கற்றல், கற்பித்தல் வள நிலை யம், விஞ்ஞான ஆய்வு கூடம், கட் புல, செவிப்புல சாதன அறைகள், தொழில்நுட்பப் பாடங்களுக்கான தனித்தனி செயற்பாட்டறைகள், அழகியல் பாடங்களுக்கான செயற் பாட்டறைகள், உடற்பயிற்சி மற்றும் உள்ளக வெளியக விளையாட்டு வசதிகள், ஜிம்னாஸ்டிக் கூடம், கலையரங்கு, நிர்வாக அலுவலகம், அதிபர் விடுதி, கழிவறைத் தொகுதி கள், சுற்றுமதில் என்பன அமைத் துக் கொடுக்கப்படவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் மற்றும் கல்வி மாவட்டமாகக் கணிக்கப்பட் டுள்ள கல்முனை மாவட்டத்திலி ருந்து பாடசாலைகள் எதுவும் தெரிவு செய்யப்படாத நிலையில், ஏனைய மாவட்டங்களிலிருந்து மொத்தம் இருபத்தைந்து தேசிய பாடசாலை கள் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இருபத்தைந்து பாடசாலை களிலும், யாழ். மாவட்டத்திலிருந் தும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந் தும் தெரிவு செய்யப்பட்டதில் - இரண்டு தமிழ் மொழித் தேசிய பாடசாலைகள் மட்டுமே உள்ளடக் கப்பட்டிருப்பதாகத் தெரியவருகி றது. (31)

# காணி நிர்வாகம் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு

வடக்கு-கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் - காணி நிர்வாகம் தொடர்பான பயிற்சிக் கருததரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 23, 24 ஆம் திகதி களில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் - காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள் ளது.

இதில் சகல பிரதேச செயலர் கள், உதவிப் பிரதேச செயலர்கள், காணி உத்தியோகத்தர்கள், குடி யேற்ற உத்தியோகத்தர்கள், வெளிக களப் போதனாசிரியர்கள், காணிக் கிளை எழுதுநர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாகாணக் காணி ஆணையாளர் இ.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

கலந்து கொள்ளும் அனைவருக் கும் காலை, மாலை சிற்றுண்டிக ளும், மதிய உணவும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (24)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : த.அமிலக்சன்
முகவரி : மட்டக்களப்பு.

அகவை மூன்று



பெயர் : அ.அனிஸ்ரன்
முகவரி : கூவில்.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------

முகவரி ----------------

பிறந்த ஆண்டு: ----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்

# 5 ஆயிரத்து 900 குடும்பங்கள் கடும் மழையால் இடம்பெயர்வு

## யாழ்.செயலகம் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பெய்த கடும் மழையால் 5,900 குடும்பங்கள் பாதிக கப்பட்டு, இடம்பெயர்ந்தி ருப்பதாக வும் இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 18 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் யாழ். செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்தன.

பாதிக்கப்பட்ட மக்களில் 270 குடும்பங்கள் தமது வீடுகளை முற் றாக இழந்துள்ளன.

இவர்களில் 200 குடும்பங்கள் சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பங் களாகும். இதைவிட, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 90 குடும்பங்கள் இடம பெயர்ந்து, பொது இடங்களில் தற் காலிகமாகத் தங்கி வருகின்றனர்.

3,450 குடும்பங்கள் உறவினர் களின் வீடுகளில் தங்கியிருக்கின்ற னர். யாழ். குடாநாட்டில் அதிகள வாக சாவகச்சேரிப் பிரதேசத்தில் 2,227 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

# வீரகத்திப் பிள்ளையார் வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச சின் துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ், விராலித்திடல் வீரகத்திப் பிள்ளையார் வீதி புனரமைப்புச் செய் வதற்காக ரூபா 15 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த வீதிப் புனரமைப்பு வேலைகள் முழுமூச் சாக நடைபெற்று வருகின்றன.

நீண்ட காலமாகப் பின்தங்கிய கிராமமாக இருந்து வந்த கப்புதூ கிராமம் அபிவிருத்தி செய்யப்படு வதையிட்டு மக்கள் மகிழ்ச்சியடைந் துள்ளனர்.

அண்மையில் இந்தக் கிராமம் சமாதான முன்னோடிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டு, அதன் வளர்ச் சிக்கான சில முன் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ். அரச அதிபரின் விசேட கவனமும், கரவெட்டிப் பிரதேச செய லரின் விடாமுயற்சியுமே இந்தக் கிராம வளர்ச்சிக்குப் பெரிதும் உதவு வதாகவும், வெகுவிரைவில் ஏனைய கிராமங்களுக்கு முன்னோடியாக கப்புதூ கிராமம் முன்னேற்றமடையு மென்றும் அந்தப் பகுதி மக்கள் நம் பிக்கை தெரிவித்தனர். (13)

## சின்னஞ்சிறு செய்திகள்

### விளம்பரப் பலகைகளை அகற்ற நடவடிக்கை

சாவகச்சேரி நகரசபையின் எல் லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதி இன்றி வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள், பதாகைகள் என்ப வற்றை அகற்ற நகரசபை அலு வலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு விளம்பரப் பலகை கள், பதாகைகளை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வைப்பதாயின், சாவகச்சேரி நகர சபையின் அனுமதி பெற்றே வைக்க முடியும்.

எனவே, அனுமதி பெற்ற பின்பே இந்த விளம்பரப் பலகையை வைக்க முடியும் என நகரசபை அலுவலகம் அறிவித்துள்ளது. (29)

### சிறுவர்களுக்கு நுளம்புவலை

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் - வெள்ளத் தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட வயோ திபர்கள், சிறுவர்களைக் கொண்ட 75 குடும்பங்களுக்கு நுளம்பு வலை கள் வழங்கப்படவுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (25)

# உரும்பிராய் சந்தியில் இளைஞர்குழு அட்டகாசம்

உரும்பிராய் சந்தியில் இனந்தெரி யாத இளைஞர் குழு கடந்த ஞாயிறு இரவு அட்டகாசம் புரிந்துள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் போது சந் தியிலுள்ள கடைகளின் பெறுமதி வாய்ந்த விளம்பரப் பெயர்ப் பல கைகள் அடித்து நொருக்கப்பட்டுள் ளன.

புதிதாகத் திறக்கப்பட்ட பான் ஸிக்கடை மற்றும் தையல் கடை ஆகியவற்றின் விளம்பரப் பெயர்ப் பலகைகளே இவ்வாறு அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இது பற்றி மேலும் தெரிய வரு வதாவது -

இந்தப் பகுதியிலுள்ள கடைக ளின் முன்பாகவுள்ள சந்திகளில் கூடி நிற்கும் இளைஞர்கள் -வீதி யால் செல்லும் பெண்களுடன் சேஷ் டைகள் புரிவதோடு, தகாத வார்த் தைகளைப் பிரயோகிப்பதையும் அவதானித்த கடை உரிமையாளர் கள் - இந்த நபர்களைக் கண்டித்து எச்சரிக்கை விடுத்ததாகவும், இதனை யடுத்தே இந்தச் செயல்கள் நடை பெற்றதாகவும் தெரவிக்கப்படுகி றது. (82)

### அளவெட்டி நாகவரதநாராயண ஆலயத்தில் விசேட பூசை

(கொக்குவில்)

அளவெட்டி தெற்கு, நாகேஸ் வரம், ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் இன்று விநாய கர் சஷ்டி பூசையும், நாளை தொடக கம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை வரையிலான பத்து தினங்களுக்கு திருவெம்பாவைப் பூசைகளும், 22 ஆம் திகதி புதன்கிழமை சுவர்க்க வாசல் ஏகாதசி பூசையும் மிகச் சிறப் பாக நடைபெற இருக்கின்றன. (206)

# விளையாட்டு தொடர்பாக வடமராட்சியில் பயிற்சி முகாம்

(வடமராட்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்படும் இளைஞர், யுவதிகளுக்கு விளையாட்டுப் பயிறசி வழங்கும் நிகழ்வின் 2 ஆவது கட்ட மாக, வடமராட்சியில் இந்த மாதம் இறுதி வாரத்தில் இளைஞர், யுவதி களுக்கான விளையாட்டுப் பயிற்சி வழங்கும் முகாம் நடத்தப்படவுள் ளது.

இந்தப் பயிற்சியை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ளதாக, யாழ். மாவட்ட உதவி இயக்குநர் ரி.சிவதெட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி முகாமில் மெய் வல்லுநர் போட்டிகள் பற்றிய பயிற்சி கள் மற்றும் கரப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் போன்ற பயிற்சிகளும் வழங்கப்படவிருக்கின்றன.

இதில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 இளைஞர், யுவதிகள் பங்குபற்றிப் பயிற்சிபெறவுள்ளனர்.

# நாவற்குழி இரும்புப் பாலத்தை படையினர் எடுத்துச் சென்றனர்

இராணுவத்தினரால் நாவற்குழி யில் அமைக்கப்பட்டிருந்த இரும்புப் பாலம் அகற்றப்பட்டு, இராணுவ வாகனங்கள் மூலம் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

'ஓயாத அலைகள் -3' தாக்குதல் நடவடிக்கையின்போது புலிகளின் படையணிகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் வகையில் கைதடி, நாவற்குழி பாலங்கள் படை யினரால் தகர்க்கப்பட்டன.

பின்னர் இராணுவ தேவை கருதி, படையினர் அவற்றை மீள அமைத் திருந்தனர்.

தற்போது பாலம் அமைக்கும் பணிகள் - வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்டதைய டுத்து, படையினரால் இது அகற்றப் பட்டுள்ளது (111)

### வணிக முகாமைத்துவ கற்கைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் 'சிறு வணிக முகாமைத்துவம்' எனும் கற்கை நெறியொன்று ஆரம்பிக்கப்பட வுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படி வங்கள் தற்பொழுது விநியோகிக்கப் பட்டு வருகிறது.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறும், விண்ணப்ப தாரி 18 வயதுக்கு மேற்படாதவராக வும், இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க.பொ.த சாதாரண பரீட் சையில் ஆறு பாடங்களில் சித்தி எய்தியிருக்க வேண்டுமெனவும், இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இணைப்பாளர் எந் திரி ச.ஆஞானேந்திரா அறிவித்துள்ளார்.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டப் பிரிவின ரால் குடாநாட்டில் இளைஞர், யுவதி களுக்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

இவ்வாறு குடாநாட்டில் பரவ லாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத் தித் திட்டப் பணிகளால் பல இளை ஞர், யுவதிகள் நன்மையடைந்துள்ள னர்.

இந்தத் திட்டங்கள் குறித்து, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவி இயக்குநர் ரி.சிவதெட்சணாமூர்த்தி தெரிவிக்கை யில் -

தேசிய இளைஞர் சேவைகள் யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி இளைஞர் விவகார அமைச்சால் ஒதுக்கப்பட்ட சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதிக்குரிய அபி விருத்திசார் வேலைத்திட்டங்களே இவ்வாறு முன்னெடுக்கப்பட்டதாகக் கூறினார்.

இந்தத் திட்டத்தின்கீழ் குடாநாட் டில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியால விளையாட்டு மைதா னம் திருத்தம், வேம்படி மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானம் திருத்தம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானம் திருத்தம் ஆகிய மூன்று சிரமசக்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அடுத்த கட்டமாக இளம் பெண் களுக்கான மனைப்பொருளியல் பயிற்சி - யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டன.

அந்த வகையில் கோண்டாவில், அச்சுவேலி, சரசாலை, இணுவில் ஆகிய பிரதேசங்களில் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதைவிட, ஆங்கில வகுப்புக்கள் மூன்றும் இந்தப் பகுதிகளில் நடத் தப்பட்டன. யாழ். மாவட்ட இளைஞர் கழகங்கள் பலவற்றுக்கு நூலக அன பளிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் ஐயனார்சங்க இளை ஞர் கழகம், பாசையூர் புனித அந் தோனியார் இளைஞர் கழகம், கோப் பாய் மத்தி இளைஞர் கழகம் ஆகிய கழகங்களுக்கு இவ்வாறு நூலக அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு தமக்கு ஒதுக்கிய நிதி யின்கீழ், குடாநாட்டின் பல பகுதிகளி லும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத் தித் திட்டங்கள் குறித்து, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவி இயக்குநர் நன்றி தெரிவித்தார்.

### பன்றித்தலைச்சி அம்மன் மஹோற்சவம்

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு அருள்மிகு பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மஹோற் சவம் நாளை பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறவுள் ளது. 9 ஆம் திருவிழா 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் 27 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (24)



# பிறந்த குழந்தையும் நோய்களும்





## சிநேகிதியே

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### சின்னமுத்து நோய் பெரிய பிரச்சினையா?

இந்தநோயால் குழந்தைக்கும், வயது வந்தவர்களுக்கும் பொதுவாக பெரிய பிரச்சினை இருக்காது. உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாதவர்களுக்கும், தோலில் – சொறி, சிரங்கு அல்லது படை மாதிரியான தோல் நோய் வரக்கூடும். ஒரு சில குழந்தைகளுக்கு வைரஸ் தாக்குதல் தீவிரமாக இருந்தால், நுரையீரல் பாதிப்பை ஏற்படுத்தி நிமோனியா நோயை ஏற்படுத்தும் . இதைத் தொடர்ந்து



மூளையில் வீக்கம் மற்றும் தொற்று ஏற்படும். இது மிகவும் ஆபத்தானது. ஆனால் பொதுவாக இந்த நோயின் காலமும் குறிப்பிட்ட காலம்தான். ஏற்படும் விளைவுகளும் குறிப்பிட்ட காலம் மட்டும் காணப்படும். இதில் வயது வந்தவர்களுக்குப் பாதிப்பு அதிகமாகக் காணப்படும்.

அதாவது குழந்தைப் பருவத்தில் ஏற்படும் பாதிப்பைக் காட்டிலும், வயது வந்தவர்கள் மத்தியில் உருவாகும் பாதிப்பு கடுமையாக இருக்கும்.

கொப்புளங்கள் வெடித்து, தாங்க முடியாத வலி ஏற்படும். பெரும்பாலும் வயது வந்தவர்களுக்கு நிமோனியா பிரச்சினை வர வாய்ப்பு உள்ளது. சில சமயங்களில் உயிர் ஆபத்து ஏற்பட நேரிடலாம். கர்ப்பிணிகளுக்கு இந்த நோய் வருவது மிகவும் ஆபத்தானது.

### கர்ப்பிணிப் பெண்களுக்கு

கர்ப்பிணிப் பெண்களுக்கு இந்த நோய் பாதிப்பு என்பது எந்தக் காலத்தில் அவர்களை வைரஸ் கிருமிகள் தொற்றுகிறது என்பதைப் பொறுத்தே அமையும். கர்ப்பம் தரித்த முதல் 3 மாதத்தில் இந்த நோய் ஏற்பட்டால், கருக்கலையும் ஆபத்தான நிலை ஏற்படுகிறது. அதே சமயம் கர்ப்ப காலத் தில் இறுதி மாதத்தில் இந்த நோய் ஏற்பட்டால், அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் பிரசவகாலத்தில் வெளிப்படும் நோய் எதிர் ப்புச் சக்தி கருவுக்குக் கடத்தப்படுவதால் இந்த நோய் நெருங்க முடியாது.

ஆனால் பிரசவம் ஆவதற்கு 5 நாட்களுக்கு முன்பாக அல்லது பிரசவம் ஆன 2 நாட்கள் கழிந்து இந்த நோய் ஏற்பட்டால், நோய் எதிர்ப்புச் சக்திகளின் செயலுக்குக் கட்டுப்படாமல் வைரஸ் கிருமிகள் நேரடியாகக் குழந்தைக்குச் சென்று விடுகின்றன. பிறந்த சில நாட்களில் குழந்தைக்கு இந்த நோய் வருவது மிகவும் ஆபத்தானது. ஏனெனில் இந்தக் கால கட்டத்தில் குழந்தைகளின் நோய் எதிர்ப்பு மண்டலத்தின் சக்தி கொஞ்சமாக அல்லது பலவீனமாகக் காணப்படும். இதனால் குழந்தைகளுக்குப் பெரிய ஆபத்து ஏற்படும்.

### இடுப்பு கரப்பானுக்கும், சின்ன முத்து நோய்க்கும் இடையான வித்தியாசம்

இந்த இரண்டு நோய்களுக்குமே வாரிசீலா – சோஸ்டர் என்ற வைரஸ் தான் காரணம். ஆனால் முதலில் வெளிப்படுவது சின்னமுத்து கொப்புளங்கள்தான். ஒரு முறை சின்னமுத்து நோய் வந்துவிட்டால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும். ஆனால் சில சமயங்களில் மேலே கூறிய வைரஸ் கிருமிகள் நரம்பு களின் இடையே உள்ள இடங்களில் இரகசியமாகப் பதுங்கி இருக்கும். உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் நேரத்தில் அதாவது – வயதான கால த்தில் இந்த வைரஸ் கிருமிகள் வேலையைக் காட்டுகின்றன. இதன் கார ணமாக இடுப்பைச் சுற்றிப் புண்கள் அல்லது கொப்புளங்களுடன் கூடிய



தோல் நோய் ஏற்படு கிறது. இதை இடு ப்புக் கரப்பான் என்று அழைக்கிறோம்.

### சின்னமுத்து நோயைப் பரவாமல் தடுக்கும் முறை

இந்த நோய் வந்தவர்களைத் தனியான இடத்தில் விடவேண்டும். பாடசாலைக்கு, வேலைக்குச் செல்லக்கூடாது. இதன் மூலம் வைரஸ் கிருமிகள் அடுத்தவருக்குப் பரவாமல் தடுக்க முடியும். இந்த நோய் வைரஸ் கிருமிகள் தாக்காமல் இருக்க ஒரேயொரு வழி அம்மை குத்துதல் ஆகும்.

அம்மை குத்துதல் காரணமாக தற்போதைய குழந்தைகளுக்கு இந்தநோய் வருவதில்லை. இது தொடர்பாக வைத்தியர்களைச் சந்தித்து விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

### கண்பார்வை குறைபாடு

பொதுவாகப் பிறந்த குழந்தைகள் 6 முதல் 8 வார காலத்துக்குள் தன்னுடைய தாயை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அதுபோல குழந்தையின் முன் யாராவது கைகளை அசைத்து, கன்னத்தைத் தொட்டு வேடிக்கை காட்டினால் குழந்தைகள் அதற்கு ஏற்ப சாதாரண உணர்வை வெளிப் படுத்த வேண்டும்.

ஒருவேளை குழந்தைக்கு இரண்டு கண்களிலும் பார்வைக் குறைபாடு இருக்குமானால், அந்தக் குழந்தை தாயை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் தவிக்கும்.

(தொடரும்...)



# நினைவாற்றலைப் பெருக்க...

நம் மனித மூளை சக்தி வாய்ந்த நல்ல கணினிகளை விடவும் சக்தி கொண்டது. நம் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள் அனைத்தையும் பதிவு செய்து கொண்டு, தேவைப்படும் சமயங்களில் அவற்றைத் திரும்ப நினைவுக்குக் கொண்டுவரும் அபார சக்தி நம் மூளைக்கு உண்டு. இதைத்தான் நாம் 'நினைவாற்றல்' என்கிறோம். இந்த நினைவாற்றலைப் பெருக்கிக்கொள்ள நிறைய வழிகள் உண்டு.

நினைவாற்றல் குறைய மிக முக்கியமான காரணம் - நாம் உண்ணும் உணவில் வேண்டியளவு சத்துகள் இல்லாமையே. அறுசுவை உண்டிகளான - இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, காரம் ஆகிய ஆறு சுவைகளில் நாம் கசப்பையும், துவர்ப்பையும் மறந்துவிடுகிறோம். உடலில் தேய்மானங்களைச் சரிசெய்யவல்லது துவர்ப்பு. நோய்க்கிருமிகளை அழித்து (கல்லீரல் சம்பந்தமான) நோய்களைக் குணப்படுத்தக்கூடிய துவர்ப்பு இவை இல்லாமையால் நம் உடல் நலம் பாதிக்கப்பட்டு, நம் நினைவாற்றல் குறைகிறது.

கருவுற்ற பெண்கள் அதிக குளிர்ச்சி கூடிய உணவுப் பொருட்களையும், மாட்டிறைச்சி போன்றவைகளையும் உண்பதால், பிறக்கும் குழந்தை மிகவும் துடிதுடிப்பில்லாமலும், நினைவாற்றல் குறைவாகவும் காணப்படும்.

தேவையைவிட அதிக, குறைந்த உணவு, நேரம் கெட்ட நேரத்தில் உண்பது போன்றவைகளாலும்கூட நினைவாற்றல் குறைந்துவிடும். அதிகமான வேலைப்பளுவால் பல தகவல்களை ஒரே நேரத்தில் மனதில் பதிய வைக்க வேண்டும் என்பது நினைவாற்றல் குறைய மிகவும் முக்கிய காரணமாகும். எதையும் ஒரு ஈடுபாட்டுடன் செய்ய நினைத்தாலேயே நினைவாற்றல் பெருகும்.

நம்மில் பலர் கடுமையான வெயிலில், வெளியில் நடந்து செல்லுதல், இதனால் மூளையின் கலன்கள் களைப்படைந்துவிடும். நினைவாற்றல் குறையும். குறைந்த பட்சம் தொப்பியாவது அணிந்து செல்வது நல்லது. நினைவாற்றலைப் பெருக்கும் வல்லமை வாய்ந்தது வல்லாரை. இதில் முக்கிய மூன்று வகைகள் உண்டு. அவை கொடி வல்லாரை, கொத்து வல்லாரை, வெங்காய வல்லாரையாகும். உடலின் உட்புறம் மற்றும் மூளையில் ஏற்படக்கூடிய வீக்கங்களைக் குணப்படுத்தவல்லது கொடி வல்லாரை. இந்தச் செடியை வேருடன் பிடுங்கியெடுத்து நன்கு சுத்தம் செய்து பசும்பால் அல்லது ஆட்டுப்பால் சேர்த்துப் பசைபோல் அரைத்து ஒருவாரம் தொடர்ந்து உண்ண வேண்டும். பின்பு சில நாட்கள் இடைவெளிவிட்டு மீண்டும் ஒரு வாரம் இதை உண்ணலாம். வல்லாரையின் முழுப் பயனையும் பெறவிரும்புவோர் அதைப் பச்சையாகப் பயன்படுத்த வேண்டும்.

வெண்டிக்காய், முருங்கைக்காய், கீரைவகைகள் போன்றவையும், மூளையின் கலங்களைக் குளிரவைத்து நினைவாற்றலைத் தூண்டவல்லன. பாடசாலை செல்லும் குழந்தைகளுக்கு இவற்றைத் தினமும் கொடுக்கவேண்டும். மூளையின் செயற்திறனையும், நம் நினைவாற்றலையும் பெருக்கவல்லதுதான் சிரசாசனம். ஆனால், இதைப் பயிற்சி பெற்ற நிபுணர்களின் துணையுடன்தான் செய்யவேண்டும். சுவாசப் பயிற்சியான பிராணாயாமமும் கூட நினைவாற்றல் தரவல்லதுதான். இவற்றைக் குழந்தைகளுக்குத் தகுந்த ஆசானைக்கொண்டு கற்பியுங்கள் சிறந்த பலனைப் பெறுவீர்கள். ☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆



# பிறப்பிலேயே ஏற்படக் கூடிய நரம்புகளின் பாதிப்புகள்

பிறப்பில், பிறக்கும் சந்தர்ப்பத்தில், சிறுவயதில் அல்லது வயதுபோனபின் நரம்புகளின் பாதிப்புக் காரணத்தால் உடல் ரீதியாக ஏற்படும் பாதிப்புக்கள் பலவிதமானது. இந்த நிலையில் பிற்காலத்தில் காணப்படுவதைவிட, அதிகமாகச் சிறுவயதில் இந்தப் பாதிப்புக் கூடுதலாகக் காணப்படுகிறது. அதேபோல் வயோதிபரான பின்பும் அதிகமாக இந்தநிலை ஏற்படுகிறது.

### பிறப்பில் ஏற்படும் பாதிப்புகள்

குழந்தை பிரசவிக்கும்போது ஏற்படும் பிரசவவேதனை பல நாட்கள் நீடிப்பதாலும், பிறப்பில் குழந்தைகளுக்கு நரம்புகளின் பாதிப்புக்கள் ஏற்படலாம். இந்தநிலை சிலபேருக்குக் கரு உருவாகும் சந்தர்ப்பங்கள் பல உள்ளன. இந்த நிலையை ஸ்கான் செய்வதன்மூலம் காணக்கூடியதாகவுள்ளது. அநேகமாக இந்தப் பாதிப்புக்கள் உள்ள குழந்தை பிரசவிக்கும்போது சீசர் செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது.

### குழந்தையின் பிறப்பின்போது ஏற்படும் பாதிப்புகளுக்குப் பல காரணங்கள் உள்ளன அவையாவன:-

- தாய்க்கு ஏற்படும் வைரஸ் பாதிப்பினால்.
- இரத்த உறவில் ஏற்படும் திருமணங்கள்.
- விந்துக்களின் பிரச்சினைகள்.
- புகைத்தல், மதுபானம் அருந்துவதில் ஈடுபடும் தாய்மார்கள்.
- எயிட்ஸ், ரூபெல்லா மற்றும் சமூக நோய்களுக்கு ஆளாகுவதால்.

அங்கவீனமான குழந்தைகளைப் பிரசவிக்கும்போது 'சீசேரியன்' செய்யவேண்டிய நிலை ஏற் படுகிறது. காரணம், இவ்வாறான குழந்தைகளைப் பிரசவிக்கும்போது குழந்தைக்குப் பாதிப்பு ஏற்பட லாம் என்ற காரணத்தினாலாகும்.

### குழந்தை பிரசவத்தின்போது ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்:-

பிரசவத்தின்போது ஏற்படக்கூடிய பாதிப்புகளின் காரணத்தால், குழந்தைகள் அங்கவீனமாகப் பிறக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக ஈ.ஆர்.பி என்ற நோயைக் குறிப்பிடலாம். இந்த நோய்க்கு ஆளாவதற்கான காரணம், பிரசவத்தின்போது குழந்தையின் கைகள், கால்கள் இழுப்பதினாலாகும். இவ்வாறு கை, கால்களால் அந்த நரம்புகள் இழுபடுகிறது.

### பிரசவத்தின்போது ஆயுதங்களை உபயோகிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்கள் -

பிரசவத்தின்போது ஆயுதங்களை உபயோகிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் உள்ளது. அவ்வாற பிரசவத்தின்போது ஆயுதங்களைப் பாவிப்பதனால் நரம்புகளில் பாதிப்புக்கள் ஏற்பட சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அதாவது இதன்போது நரம்புகள் இழுபடுகின்றன. இவ்வாறு தலையில் ஏற்பட்டால் தலையிலுள்ள நரம்புகள் இழுபடுவதால் இரத்தக்கட்டிகள் ஏற்படலாம்.

(தொடரும்...)

# பிஞ்சு முகத்தில் தேடல்



மனோன்மணி சண்முகதாஸ்

வகுப்பறையில் ஒரே சத்தமாக இருந்தது. இன்றைக்குப் பாடசாலை விடுமுறை. மூன்றாந்தவணைப் பரீட்சை முடிந்துவிட்டது. எங்கள் ஆசிரியர் பரீட்சைப் புள்ளிகளையெல்லாம் தேர்ச்சி அறிக்கையில் எழுதி எங்களிடம் தந்துவிட்டார். எங்கள் வகுப்பில் எல்லோரும் நல்ல புள்ளிகள் பெற்றிருந்தினம். ஆசிரியர் எல்லோரையும் பாராட்டி இனிப்புத் தந்தார். பிறகு அதிபரிடம் ஏதோ அலுவலாகப் போய்விட்டார். அவர் வெளியே போனதுதான் தாமதம் வகுப்பு ஒரே மகிழ்ச்சியாக, ஆரவாரமாக கதைக் கச்சேரி செய்தது. புதிய வகுப்புக்குப் போய்ப் படிப்பது பற்றியும், கொப்பி, புத்தகம் வாங்குவது பற்றியும் கதை நடந்து கொண்டிருந்தது.

எங்கள் வகுப்பு பாடசாலையில் ஒரு மூலையில் இருந்தது அதனால் பாடசாலைக்கு வருபவர்களைப் பார்க்க முடியாது. என்னுடைய மனம் காலையில் இருந்தே தவித்துக் கொண்டிருந்தது. நாளைக்கு வீட்டை போய்விடுவேன். இன்றைக்கு எப்படியாவது அம்மாவைச் சந்திக்கவேண்டும். அவள் கட்டாயம் பாடசாலைக்கு வருவாள்... கடவுளே! எனக்கு அருள் செய்யும்! பக்கத்திலே இருந்த ஆராதனை மண்டபத்தை நோக்கிக் கை குவித்து நான் வணங்கினேன். பக்கத்திலே இருந்த நந்தினி என்னை ஒருவிதமாகப் பார்த்தாள். அபிராமி! என்னடி... ஆராதனை செய்கிறாய்? பக்கத்திலே வந்த விமலா என் தோளைத் தொட்டாள். எனக்கு அழுகை வந்தது. அவள் என் பக்கத்தில் அமர்ந்துகொண்டாள். என் கையைத் தன் கையில் கோர்த்துக் கொண்டாள். என்ன! அம்மாவைப் பற்றி நினைக்கிறாயா? அவள் குரலிலும் சோகம். நான் மௌனமாக தலையாட்டினேன். விமலா சொன்னாள் அபிராமி! அம்மா இண்டைக்குக் கட்டாயம் வருவாவடி. அந்தக் குரலில் அசையாத நம்பிக்கை தென்பட்டது. நான் அவள் கையை இறுகப் பற்றியபடி கண்ணை மூடிக்கொண்டே என் மனத்திரையில்... படம் ஓடத் தொடங்கியது.

நாங்கள் இடம்பெயர்ந்துபோய் ஒரு பாடசாலையில் தங்கியிருந்தோம். அப்பா நான் இரண்டு வயதாக இருக்கும்போதே மலேரியாக் காய்ச்சல் வந்து செத்துப்போனார். அப்போது அண்ணாவுக்கு 4 வயது. அம்மாவுக்கு 25 வயது. நாங்கள் அம்மம்மா வீட்டில் வந்து இருந்தோம். அம்மா கூலி வேலைக்குப்போய் எங்களை வளர்த்தா. அம்மா நல்ல வடிவு. அதனால் அவளுக்குப் பல பிரச்சினைகள். அது அப்போது எனக்கு விளங்கவில்லை. ஆனால் இப்ப நான் வளர்ந்தபின்பு ஓரளவு விளங்குது. அண்ணாவும், நானும் பாடசாலைக்குப் போய்ப் படிக்கத் தொடங்க அம்மாவின் போக்கிலும் மாற்றம் வந்தது. கூலி வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்தா. ஆனால் காசு வைத்திருந்தா. அம்மம்மாவோடு நெடுகச் சண்டை பிடித்தா. ஒரு நாள் நாங்கள் பாடசாலைவிட்டு வீடு வந்தபோது அம்மாவைக் காணவில்லை. நான் ஏங்கிப்போனேன். அன்று முழுவதும் அழுதேன். அம்மம்மாவும் மௌனமாக இருந்தா. அண்ணா மட்டும் நடந்துபோய் ஒவ்வொரு நாளும் எங்காவதுபோய் அம்மாவைத் தேடிக்கொண்டிருந்தான்.

ஒருநாள்... அம்மம்மா! எங்களை விட்டுப் போய்விட்டா. ஏதோ நெஞ்சு வலி என்றா. தண்ணீர் கேட்டா. நான் கொண்டுவந்து அவாவிடம் கொடுத்தேன். அவவின் தலைசரிந்துவிட்டது. அப்போதுதான் எனக்கு எப்படிச் சாகிறது எண்டு தெரிஞ்சுது. நான் அழவில்லை. அதிர்ச்சியில் உறைந்து போனேன். காணாமல்போன அம்மா... அம்மம்மாவின் செத்தவீட்டுக்கு வந்தா. அவவின் தோற்றம் மாறிப் போயிருந்தது. நல்ல ஆடம்பரமாக உடுத்திருந்தா. கையில் ஒரு சின்னக் குழந்தை. அதை என்னிடம் தந்துவிட்டு அம்மம்மாவின் கால்களைப் பற்றி அழுதா. நான் குழந்தையின் முகத்தைப் பார்த்தேன். அது என் கன்னத்தைக் கைகளால் பற்றி முத்தமிட்டது. நான் அம்மாவின் முகத்தை அந்தக் குழந்தையின் முகத்தில் கண்டேன். அம்மா கண்ணைத் துடைத்துக்கொண்டு எழும்பி வந்தா. குழந்தையை என்னிடமிருந்து வாங்கினா. சரசர வென்று வேகமாக நடந்துபோய் விட்டா. நான் திகைத்துப்போய் அவவின் பின்னால் ஓடினேன். அவ தெருவில் நின்ற ஓட்டோவில் ஏறிப் போய்விட்டா. அண்ணா தான் அம்மம்மாவின் இறுதிக் கிரியைகளைச் செய்தான்.

மூன்றாம்நாள் அம்மா ஓட்டோவில் திரும்பி வந்தா. எனக்கு மகிழ்ச்சி. என்னையும் அண்ணாவையும் ஓட்டோவில் ஏற்றிக் கொண்டு புதிய வீட்டுக்கு வந்தா. சின்னவீடுதான், அங்கேயிருந்தவர் எங்களைப் பார்த்ததும் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டார். அவர் கையில் இருந்த குழந்தை என்னை நோக்கித் தாவியது. நான் பேசாமல் நின்றேன். அவர் வெளியே குழந்தையோடு போய்விட்டார். அம்மா எங்களுக்கு உணவு, உடை எல்லாம் தந்தா. ஆனால் நாங்கள் தன்னோடு இருக்கமுடியாது என்று கண்ணீருடன் சொன்னா. எங்களைச் சிறுவர் இல்லத்திலே சேர்த்துவிட்டா. எனக்கு முதலில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. அண்ணாவோ இல்லம் பிடிக்காமல் ஒருநாள் ஓடிவிட்டான். நான் மீண்டும் தனித்துப் போனேன். என் தோழி விமலாதான் எனக்கு ஆதரவு தந்தாள். அவளோடு சேர்ந்து படிப்பில் கவனத்தைச் செலுத்தினேன். இல்லப் பிள்ளைகள் எல்லோரும் விடுமுறைக்கு வீட்டுக்குப்போகும்போது, நானும் விமலாவும் மட்டும் தனித்திருப்போம். அதுவும் பழகிப் போச்சு. அபிராமி! அபிராமி! அம்மா வாறாவடி. பலகுரல்கள் காதில் விழவே, நான் தியானம் கலைந்து கண்ணைத் திறந்தேன். வகுப்பறையை விட்டு எல்லோரும் வெளியே ஓடினார்கள். நானும் ஓடினேன்.

அங்கே என் பார்வையில் பட்ட உருவம்!... அது... என் கண்களை ஒருமுறை கசக்கிவிட்டுப் பார்த்தேன். வேறுயாரோ!...என்னுடைய மனம் சோர்ந்துபோனது. ஆனால் விமலா காதருகே வந்து சொன்னாள். இந்த அம்மாதான் நல்லவ. எங்களுக்கெல்லாம். எல்லாம் செய்யும் அம்மா!... நான் இப்போது அந்த அம்மாவைப் பார்த்தேன். எல்லோரும் ஒரே குரலில் வணக்கம் சொன்னோம். அவ எங்கள் அருகில் வந்தா. எல்லோரையும் பார்த்துச் சிரித்தா. வணக்கம் சொன்னா. அவவை எல்லோரும் சூழ்ந்துகொண்டோம். ஒவ்வொருவரையும் அவ அன்போடு விசாரித்தா. நான் என்னுடைய முறைவரும்போது ஏதாவது புதிதாகச் செய்யவேண்டும் என்று நினைத்தேன். என் மனதில் பதிந்திருந்த அம்மாவின் இடத்தில் இந்த அம்மாவை எப்படிப் பதிய வைப்பது? என்னுடைய அம்மா வரமாட்டா? ஆனால் இந்த அம்மா எங்களில் அக்கறையாக இருக்கிறா. எல்லாப் பொறுப்பையும் ஏற்று எங்களை நல்லவராக்கப் பாடுபடுகிறா. எண்டாலும் சொந்த அம்மா இல்லையே!... இப்ப என் முறை வந்துவிட்டது. நான் அந்த அம்மாவைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

மம்மி! வணக்கம்! அந்த அம்மா என்னைப் பார்த்துச் சொன்னா. வணக்கம் அபிராமி தமிழில் அம்மா எண்டு சொல்லு. நான் என்தவறை உடனே உணர்ந்து தலையைக் குனிய அந்த அம்மா என் தலையை நிமிர்த்திச் சொன்னா! எல்லோருக்கும் அம்மா ஒருவர் உண்டு. ◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

## நின்று கொல்லும் புற்றுநோய்

எமது உடலமைப்பில் கலம் என்பது உடலை உருவாக்கும் அடிப்படைப் பொருளாகும். கட்டடத்துக்குக் கொங்கிறீற் கல் கொடுக்கும் அமைப்புப்போல, பல கலங்கள் கலத்திடைப் பாய் பொருளாய் இணைக்கப்பட்டு, இழையங்களை உருவாக்கிறது. இந்த இழையங்களின் சேர்க்கையால் அங்கங்கள் உருவாகின்றன. உடற்கலங்கள் சில குழந்தையிலிருந்து சாதாரண மனித உரு நிறையைப்பெற, நாளாந்தம் கலப் பெருக்கமடைகின்றன. சிலவகைக் கலங்களின் வாழ்நாள் குறுகியதாகவும், சில கலங்கள் நீடித்ததாகவும் தேவைக்கேற்ப அமைக்கப்படுகின்றன. அழிக்கப்படும் கலங்கள் மீளவும் உற்பத்தி செய்யப்பட்டு, எந்தவித பாதிப்பும் ஏற்படாதநிலையை அடைகிறது. இத்தகைய செயற்பாட்டுக்கு உயிரினவியல் சேர்க்கைத் தொழிற்பாடுகள் காரணமாகும். கலங்கள் சில சமயங்களில் வளர்ச்சியில் ஒருவித கட்டுப்பாடும் அற்று, தேவைக்கு அதிகமாக வளருவதையும், அப்படி வளரும்போது தாய்க் கலத்தின் தன்மையிலிருந்து மாறுபட்டு, தமது கரு, கருவின் கரு என்பன முன்னுக்குப்பின் முரண்பட்டு உருமாற்றமடைந்து காணப்படுவதுவே புற்றுநோயாகும். கலங்களின் உருவ மாற்றத்தோடு அவை தொழிற்படும் தன்மை, உயிரினவியல் நடைமுறைகள் என்பவற்றில் மாற்றம் காணப்படும். இந்தக் கலங்கள் மாறுபாடடையும் தன்மையினால் இழையங்கள் ஒன்றுபட்டிருப்பதைக் காட்டிலும், பிரிவடைந்து இரத்த ஓட்டமூலமாகவும், நிணநீர் மூலமாகவும் உடம்பின் வேறு இடங்களுக்குப் பரவக்கூடும். அல்லது அயலிலுள்ள இழையங்களை ஊடுருவி நோய் நிலையை உருவாக்கும்.

### புற்று நோயைத் தடுக்கும் முறைகள்

**வாய், பல் சுத்தம் பேணுதல் -**

வாய்ப்புற்றுநோய் எமது நாட்டில் குறிப்பிட்டுக் கூறவேண்டியதொன்றாகும். இந்தவகையான நோய் அதிக மானவர்களைப் பாதிக்கிறது. அதனால்தான் பல் சுகாதாரத்தை நல்லமுறையில் பேணுவதன்மூலம் இதைக் குறைக்கலாம்.

**புற்றுநோயாக மாறக்கூடிய நோய்களுக்குக் காலம் தாழ்த்தாது சிகிச்சையளித்தல்.**

பெண்கள் மார்புகளை அடிக்கடி பரிசோதித்தல், வயோதிபப் பெண்கள் சந்தேக அறிகுறிகள் காணப்பட்டால், பரிசோதனை செய்தல். அல்லது அறிகுறிகள் தென்படும்போது புற்றுநோய் மருத்துவரைச் சந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

**உணவுப் பழக்கவழக்கங்கள் -**

அதிகளவு கொழுப்பு, புரதம், குறிப்பாக விலங்கிலிருந்து பெறாத உணவுகள், இரும்புச் சத்து, உயிர்ச்சத்து ஏ பற்றாக்குறையில்லாத உணவுகள், பூஞ்சணம் பிடிக்காத உணவுகள், தகரத்தில் அடைத்துவராத உணவுகள் போன்ற உணவுகளை உட்கொள்வதாலும், மதுபானம் அருந்துதல், புகைத்தல், வெற்றிலை சாப்பிடுதல் இவற்றைத் தவிர்த்து, நிறையைக் காத்து நலனைப் பேணுதல் வேண்டும்.

தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் - கிருமிநாசினி உபயோகித்தலில் ஈடுபடுபவர்கள். இரசாயனப் பொருட்களின் பாதிப்பிலிருந்து முகமூடி, கையுறை போன்றவற்றை உபயோகிப்பதன் மூலம் சுற்றாடல் மாசுபடுதலைத் தடுக்கலாம். சில மருந்துகளின் நீடித்த பாவனை புற்று நோயை உண்டாக்கலாம். ஆகவே வைத்திய ஆலோசனையின்றி மருந்து உபயோகிப்பதைத் தவிர்த்தல். ↔↔↔↔↔↔↔↔↔↔↔↔↔↔↔↔↔↔

# லெப்டினனன்ட் கேணல் மறவனின் வித்துடல் நேற்று விதைக்கப்பட்டது

கடற்புலிகளின் மூத்த உறுப்பினர் லெப்டினனன்ட் கேணல் மறவன் மாஸ்ரரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் -முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு - செம்மலை மகா வித்தியாலத்தில் லெப்டினனன்ட் கேணல மறவனின் வித்துடல் - கடந்த செவ்வாய்க்கிழமை காலை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் முல்லைத்தீவு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்திலும், மாத்தளன் சாள்ஸ் மண்டபத்திலும், புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்திலும் வைக்கப்பட்டு இறுதி வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

பின்னர் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகமும், அவரது துணைவியாரும் ஏற்றி வைத்தனர்.

லெப்டினனன்ட் கேணல் மறவனின் உறவினரான சேகரநாயகம் வித்துடலுக்கான ஈகைச்சுடரை ஏற்றி, மலர் மாலையையும் அணிவித்தார்.

இந்த நிகழ்வின் நினைவுரைகளை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், கடற்புலிகளின் தளபதி செழியன், ரி.ரி.என் நிறுவனத்தைச் சேர்ந்த நகுலன், மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வின் சிறப்புரையை அரசண்ணா நிகழ்த்தினார். இறுதி அஞ்சலி நிகழ்வில் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் வித்துடலுக்கான மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செய்தார்.

இநத நிகழ்வு - கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் இடம்பெற்றது. இறுதியாக உடுத்துறை மா்வீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் விதைக்கப்பட்டட்து.

## கண்ணிவெடிகள் அகற்றும் பணி ஆரம்பம்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றும் பணி இடம்பெற்று வருகிறது.

இந்தப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் இனங்காணப்பட்டு, இவற்றை அகற்றும் பணியை மனிதநேய கண்ணிவெடி அகற்றும பிரிவு ஆரம்பித்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருட்களால் பெருமளவான பொதுமக்கள் காயமடைந்துள்ளதுடன், உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வன்னிப் பதிவுகள்



இராமநாதபுரம் மாவடியம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வாய்க்கால் நிரம்பி வீதிக்குக் குறுக்காகப் பாய்வதால் பொது மக்கள் சிரமப்பட்டு நடமாடுவதைக் காணலாம்.

படம் : இராமநாதபுரம் செய்தியாளர்

# மூன்றாம் பிட்டிக் கிராமத்தில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மூன்றாம் பிட்டிக் கிராமத்தின் வீதி சேதமடைந்துள்ளமையால், இந்தக் கிராமத்துக்கான குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் மூன்றாம் பிட்டி, விடத்தல்தீவு ஆகிய கிராமங்களில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால், வேறு இடங்களிலிருந்தே குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மூன்றாம்பிட்டி வீதி கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகப் புனரமைகப்படாத நிலையில், அண்மை நாட்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாகச் சேதமடைந்த இந்த வீதியைக் குறுக்கறுத்து மழைநீர் பாய்கிறது. இதனால் இந்த வீதியூடான போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டுள்ளன.

இந்த நிலையில், குடிநீர்த் தாங்கி வாகனம் மூலமாக - குடிநீர் விநியோகமும் மேற்கொள்ளமுடியாத நிலையுள்ளது.

இதனால் இந்தப் பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## சுகாதார தொண்டர்களுக்கான பரீட்சை ஒத்திவைப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவடங்களில் சுகாதாரத் தொண்டர்களை நிரந்தரமாக்குவதற்காக நடைபெறவிருந்த இரண்டாவது நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக, கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தெரிவித்துள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை நாளை நடைபெறவிருந்து - தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



இராமநாதபுரத்திலிருந்து கல்மடுநகர் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள இராமநாதபுரகுளம் வான்பாய்வதைப் படத்தில் காணலாம்.

## கருத்தரங்கு

வவுனியா- செட்டிகுளம் பிரதேசத்தில் சமகால அரசியற் கருத்தரங்கு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் தற்போதைய அரசியல் நிலைப்பாடு தொடர்பான கருத்துரைகளும், தெருவெளி கலைஞர்களின் கலைநிகழ்வும் இடம்பெற்றன.

## சின்னஞ்சிறு செய்திகள்

### அடிப்படை வசதிகளின்றி சொர்ணபுரி மக்கள்

மன்னார் - சொர்ணபுரி பிரதேச மக்கள் தமது அடிப்படை வசதிகளான - சுகாதாரம், கல்வி போன்ற வசதிகளின்றி பெரும் சிரமங்களை ஏதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்கள் தமக்கான எந்தவித வசதிகளைப் பெற்றுக்கொள்வதாயினும், 20 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்றே தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் இந்தப் பகுதி மக்கள் போக்குவரத்து வசதிகள்கூட இன்மையால் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

### ரோந்து நடவடிக்கையில் இராணுவத்தினர்

(வவுனியா)

வவுனியா - செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவத்தினர் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேச மக்கள் குடியிருப்பு வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஈடுபட்டு வருவதுடன், பொதுமக்கள் மத்தியில் அச்சமூட்டும் வகையில் திடீர் சுற்றி வளைப்புக்களையும், விசாரணையும் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

### சிகிச்சைக்குப் பதிவுசெய்தோர் சமூகமளிக்கவும்

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை இருதய சிகிச்சைக்கும், எக்ஸ கதிர் பரிசோதனைக்கும் தமது பெயர்களைப் பதிவு செய்தோர் இன்றும், நாளையும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் காலை 8 மணி முதல் நடைபெறவுள்ள சிகிச்சைக்கு தவறாது சமூகமளித்து, சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீதிகளை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை

## வீதிப்போக்குவரத்து பொறியியலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்ட வீதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தின் சி,டி தர வீதிகள் அனைத்தும் அண்மையில் பெய்த கடும்மழை காரணமாகச் சேதமடைநது காணப்படுவதால், போக்குவரத்துககுப் பெரும் இடையூறாக அமைந்துள்ளது.

இதுபற்றி கிளிநொச்சி மாவட்ட வீதிப் போக்குவரத்து பொறியியலாளர் வே.சிவயோகன் தெரிவிக்கையில் -

இநத மாவட்டத்திலுள்ள அனைதது வீதிகளின் பல இடங்களில் வெள்ளம் இரண்டு அடி தொடக்கம் 5 அடி வரை வீதிக்கு மேலாகப் பாய்வதால், வீதிகளை அரித்துச் செல்கிறது.

இந்த வீதிகள் - கிரவல் மண்ணால் செப்பனிடப்பட்ட வீதிகள். பல வருடங்களுக்கு முன்னர் வாகனங்கள் செல்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டது. ஆனால், அப்போதைய வாகனப் பாவனையிலும் பார்க்க தற்போது வாகனங்களின் தொகை பலமடங்கு அதிகரித்துள்ளது.

மேலும் ஏ-9 வீதி திறப்பதற்கு முன்னர் சி,டி தர கிரவல் வீதிகளே சகல வாகனங்கள் செல்வதற்கும், தொடரணியாக தெற்கிலிருந்து உணவுப் பொருட்களைக் கொண்டு வருவதற்கும் பிரதான வதிகளாகக் காணபட்டன.

இதைவிட பொதுமக்களின் அன்றாடப் போக்குவரத்துப் பாதைகளாகவும் இந்த வீதிகள் செயற்பட்டன. இதன் காரணத்தால் இந்த வீதிகளும், வடிகால் கட்டுமாணங்களும் 90 வீதமானவை சேதமடைந்து காணப்படுகின்றன.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பின், இந்த வீதிகளைப் புனரமைப்பதற்கு எந்தவித வெளிநாட்டு நிதிகளும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சிறுதுளி நிதி மூலமே இந்த வீதிகள் ஓரளவுக்கேனும் போக்குவரத்துக்கு ஏதுவாகச் செப்பனிடப்பட்டது.

இந்தக் கிரவல் வீதிகளைத் தார் வீதிகளாக அபிவிருத்தி செய்வதற்கு, இதுவரையில் போதுமான நிதி கிடைக்கவில்லை. அணமையில் பெய்த கடும் மழைகாரணமாக பல வீதிகளில் போக்குவரத்துத் தடைப்பட்டு, இந்த மாவட்டம் பல கூறுகளாகப் பிரிககப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி -புளியம்பொக்கணை வீதியில் 2 கிலோமீற்றர் நீளத்துக்கு 2 அடி தொடக்கம் 5 அடிவரை உயரமாக வெள்ளம் வீதிக்கு மேலாகப் பாய்கிறது.

கிளிநொச்சிக் குளத்தில் உள்ள 5 அடி வானில், 5 அடி உயரமாக வெள்ளம் வீதிக்கு மேலாகப் பாய்கிறது. பெரியகுளம் கிராமம் நீருள் மூழ்கியுள்ளதால், மக்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளனர்.

முறிகண்டி - வன்னேரி வீதியில் அமைந்துள்ள தாம்போதிகளில் 5 அடி உயரம் வரை வெள்ளம் பாயகிறது. புதுமுறிப்பு - கோணாவில் வீதியில் ஒரு கிலோமீற்றர் நீளத்துக்கு வீதிக்கு மேலாக 3 அடி வெளஎம் பாய்வதால், வீதி அரித்துச் சென றுள்ளது.

அக்கராயன் - வலதுகரை வீதியின் பல இடங்களில், வலது கரை வாய்க்கால் நீர் - வீதிக்கு மேலாக 3 அடி உயரத்துக்குப் பாய்வதால், யூனியன்குளம் கலிங்குத் தாம்போதி 50 வீதத்துக்கு மேலாக பாதிப்புக்குள்ளாகி, போக்குவரத்து தடைபட்டபோது, பராமரிப்பு நிதிமூலம் போக்குவரத்து செப்பனிடப்பட்டது.

அண்மையில் பெய்த மழை காரணமாக இந்தக் கட்டுமானம் பலத்த சேதத்துககு உள்ளாகியுள்ளது. இந்த வீதியைப் புனரமைப்பு செய்வதற்கு எதுவித நிதியும் எமககு கிடைக்கவில்லை.

வன்னேரிக்குளம் -பண்டிவெட்டி பாலக் கட்டுமானத்தின்போது அமைக்கப்பட்ட உப பாதை - மூன்று தடவைகள் அமைக்கப்பட்ட போதும், கடும் மழை காரணமாக அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

ஒரே நாளில் கைச்சாத்திடப்பட்ட மூன்று பாலங்களில் -2 பாலங்கள் பூர்த்தியாக்கப்பட்டு, சீரான போக்குவரத்துக்கு விடப்பட்டுள்ளது.

ஒன்று புதுமுறிப்பு - கோணாவில் வீதிப் பாலம். மற்றையது ஸ்கந்தபுரம் - கோணாவில் வீதிப்பாலம். மூன்றாவது பாலமான வன்னேரிக்குள - பண்டிவெட்டிப்பாலம் வெளியூர் ஒப்பந்தகாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட காரணத்தாலும், அவர்களின் அசமந்த போக்கினாலும் குறித்த காலப்பகுதிக்குள் நிறைவு செய்யப்படவில்லை.

பரன்கிராய், கல்முனை வீதி கடந்த 40 ஆண்டுகளாகப் பராமரிக்கப்படவில்லை. இந்த வீதியைச் செப்பனிட சிறான், நிகொட் போன்ற வெளிநாட்டு நிறுவன் நிதிமூலம் முன்மொழிவுகள் சமா்ப்பிககப்பட்ட போதும், எதுவித நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை.

இவ்வாறான காரணங்களால் சி,டி தர வீதிகளைப் புனரமைக்கவோ, அபிவிருத்தி செய்யவோ முடியாத நிலையில் உள்ளது.

தற்சமயம் தமிழீழ நிர்வாக சேவையின் கடும் முயற்சி காரணமாக உருத்திரபுரம், கிராஞ்சி வீதிகளுக்குமாக நிகொட் நிறுவனம் மூலம் சிறியளவு நிதி ஒதுக்கப்பட்டு கேள்வி கோரப்பட்டுள்ளது.

ஏனைய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதி ஒதுக்கீடு கிடைப்பதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை.

இந்த மாவட்ட மக்கள் தொடர்ந்தும் போக்குவரத்து இடையூறுகளின் மத்தியில் பிரயாணங்களைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட வீதிகளைத் தற்காலிகமாகச் சீர் செய்வதற்குப் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு, நிதி நிறுவனங்கள் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்திலேயே வீதிகளின் போக்குவரத்தைச் சீர்செய்யமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதுஓர் கோல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜே.வி.பிக்கு விழுந்த அடி

சமாதானமுயற்சிகள் குறித்து ஜே.வி.பி கொண்டிருக்கும் விரோதமான போக்கு குறித்து, சர்வதேச சமூகத்திடமிருந்து பலமான கண்டனம் ஒன்று வெளியாகியிருக்கிறது.

அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி சமீப காலமாக ஆட்டம் போட்டு வந்த நிலையில், இந்த எச்சரிக்கையும் கண்டனமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் நடவடிக்கைகள் அரசாங்கத்துக்கே பொறுக்கமுடியாத அளவுக்கு எல்லை கடந்த வெறுப்பேற்றுவதாக அமைந்திருந்தது.

சமாதான முயற்சிகளுக்குக் குறுக்கே நின்று கூடப் பேசுவது மட்டுமன்றி, தமது மக்களின் உரிமைகளுக்கு எதிரான காட்டுக் கூச்சல் போடுவதிலும் ஜே.வி.பி முன்னின்று செயற்பட்டு வருகிறது.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவற்கு ஜே.வி.பி தடையாக இருந்து வருவது குறித்து ஏற்கனவே உள்நாட்டில் பல்வேறு தரப்புகளிலிருந்தும் கண்டனங்கள் வெளியாகிஇருந்தன.

ஆனால், அதற்கெல்லாம் மசிந்துகொடுக்காமல் தொடர்ந்தும் இனவாதத்தைக் கக்கும் போக்கில் ஜே.வி.பி செயற்பட்டு வந்தது. அரசாங்கத்திற்குள் ஒருமித்த கருத்தில்லாத சூழலில், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்து செல்லமுடியாது என்று புலிகள் தரப்பு ஏற்கனவே கூறியிருந்தது.

நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசுவது குறித்தே பிடிவாதமாக அரசு இருந்த போது - அதற்குப் பின்னணியில் ஜே.வி.பி தான் இருந்தது. ஆனால், ஜே.வி.பியிடமோ, அரசாங்கத்திடமோ இறுதித்தீர்வாக எதைக்கொடுப்பது என்ற தெளிவு இன்னமும் தான் கிடையாது.

அரசாங்கம் தமக்குள் முரண்பாடுகளைக் கொண்டிருக்கும சூழலில், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதென்பதில் சாத்தியமே இல்லை. அதனால் தென்னிலங்கை அரசியல் சக்திகள் ஒருமித்த குரலில் தமது கருத்து உடன்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று புலிகள் அறிவித்திருந்தனர்.

புலிகளின் கோரிக்கையில் இருந்த நியாயம் அனைத்துத் தரப்பினராலும் இப்போது உணரப்பட்டிருக்கிறது. ஜே.வி.பி சமாதான முயற்சிகளுக்குக் குறுக்கே நின்று கொண்டிருப்பதால் அமைதி முயற்சி பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளதென அமெரிக்க, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் ஆகியநாடுகளில் கருத்து ஆழமானதென்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

உதவி வழங்கும் நாடுகள் சமாதான முயற்சிகள் இழுபறிப்படுவது குறித்து ஏற்கனவே விசனம் தெரிவித்திருந்தன. அதற்கு அரசாங்கமோ, ஜே.வி.பியோ காது கொடுக் காமல் இருந்து வந்தன.

அண்மையில் ஜே.வி.பி யினர் நோர்வேக்கு எழுதிய கடிதம்தான் அவர்களுக்கே அச்சுறுத்தலாகிவிட்டது. அரசு என்ற ரீதியில் எழுதுவதாக ஜே.வி.பி எழுதிய கடிதமும், அதனால் நோர்வே கொண்ட சீற்றமும் சர்வதேச சமூகத்தினால் நன்கு உணரப்பட்டுள்ளது.

இதன் பின்னர்தான் இந்தக் கண்டன அறிக்கை வெளிவந்திருக்கிறது. ஜே.வி.பிக்கு மட்டுமன்றி அரசாங்கத்துக்கும் கூட இந்த எச்சரிக்கை சற்று ஆட்டத்தைத்தான் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச சமூகத்தைப் பகைத்துக் கொண்டு எதையும் செய்ய முடியாது என்பதை ஜே.வி.பி உணர்ந்து கொள்ள வேண்டும். இப்படியொரு கண்டனம் வெளிவந்த பின்னராவது - திருந்தி நடக்க ஜே.வி.பி முனைய வேண்டும்.

தமிழ் மக்களின் நிம்மதியைக் குலைத்து, அவர்களின் உரிமையைப் பறித்துக் கொண்டு, சிங்கள தேசத்தால் நிம்மதியாக வாழ முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அப்படியல்லாமல் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து - அதில் தமது அரசியலை நடத்துவோம் என்று ஜே.வி.பியோ, அரசாங்கமோ நினைத்தால் அதன் விளைவுகள் ஆபத்தாகவே அமையக் கூடும்.

அரசாங்கம் கூட நோர்வேயின் மத்தியஸ்தம் குறித்துக் கொண்டிருக்கும் கருத்து சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும், உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்திருப்பதுடன் - இது தொடர்பான உறுதிப் பாட்டையும் கோரியுள்ளன.

ஆக, அரசாங்கம் ஜே.வி.பியுடன் சேர்ந்து சண்டைக்குத் தயாராகப் போகின்றதா அல்லது உதவி வழங்கும் நாடுகளுடன் இணைந்து சமாதான முயற்சிகளை தொடரப் போகிறதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்பதே இந்த அறிக்கையின் சாராம்சம்.

## நாடும் நடப்பும்




# குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்க திட்டம்

இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பளிக்கும் தொழில் அமைச்சின் திட்டத்தின் கீழ், யாழ். மாவட்டத்திலும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். வணிகர் கழகத்தில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சர்வதேச தொழிலாளர் குழுமம் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர். சர்வதேச தொழிலாளர் குழுமம் சார்பாக திட்ட ஆலோசகர் மேரி வன்ஸ்ரீன் கிஸ்ரரும் இலங்கை வர்த்தக சம்மேளம் சார்பாக திட்ட இயக்குநர் பிரியந்த பெர்னாண்டோவும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு அவர்களுடைய ஆற்றலுக்கேற்ப தொழில் வாய்ப்புகள் வழங்குவது சம்பந்தமான விடயங்கள் ஆராயப் பட்டன. முதலில் இவர்களுக்குத் தொழில் பயிற்சி வழங்கப் படும். அதன் பின்னர் தொழில் வாய்ப்புக்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வழங்கப்படவிருக்கிறது. இந்தத் திட்டத்தின் முன்னோடியாக இந்த நிறுவனங்கள் யாழ். வணிகர் கழகத்தின் அனுசரணையுடன் அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் 'தொழில் இல்லம்' ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தற்காலிக குடிசை அமைக்கும் யு.என்.எச்.சி.ஆரின் பணிகள் முடிவு!

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரின் 2004 ஆம் ஆண்டுக்கான இடம் பெயர்ந்த முகாம்களில் வாழும் மக்களுக்கான தற்காலிக குடிசைகள் அமைக்கும் வேலைகள் இந்த மாதம் 15ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் அட்டகிரி முகாமில் 22 குடிசைகளும், உடுப்பிட்டியில் 15 குடிசைகளும், பொலிகண்டி நிலவன் வீதியில் 8 குடிசைகளும், பாலாவியில் 12 குடிசைகளும், திக்கம் பகுதியில் 9 குடிசைகளும், சேந்தாங்குளம் 15 குடிசைகளும் சக்கோட்டையில் 31 குடிசை களும், புனித நகரில் 66 குடிசைகளும், மணற்காடு 9, மாலி கைத்திடல் 39, நடுக்குடத்தனை 37 குடிசைகளும் இந்த நிறுவனத்தினரால் செய்து முடிக்கப்பட்டுவிட்டன என்றும், அடுத்த கட்டமாக உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீள அனுமதிக்கப்படின் அவர்களில் 150 பயனாளிகளுக்கு குடிசைகள் அமைப்பதற்குப் பயனாளிகள் தெரிவு தற்போது நடைபெற்று வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (55)

## உப தபாலகங்களின் தொலைபேசி இணைப்புக்கள் செயலிழந்துள்ளன

சுன்னாகம், அச்சுவேலி மாதகல் மேற்கு தொல்புரம் புங்குடுதீவு, நயினாதீவு, ஆவரங்கால், நெடுந்தீவு மேற்கு, களபூமி, கரம்பன் கிழக்கு, கபபுதூ, நாரந்தனை தெற்கு, பனிபபுலம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு போன்ற இடங்களிலுள்ள உப தபாலகங்களில் இலங்கை ரெலிக்கொம் நிறுவனததால் பொருத்திக் கொடுக்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் யாவும் கடந்த சில மாதங்களாக செயலிழந்துள்ளன.

இதன் காரணமாக அவசர தேவைகளுக்காக தொலைபேசி சேவைகளை இந்தத் தபால் நிலையங்களிலிருந்து பெற்று வந்த மக்கள், உயர் கட்டணங்களைக் கொடுத்து தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களில் தமது அவசர தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

பல மாதங்கள் கடந்தும் தொழில்நுட்பக் கோளாறுகளைச் சீர் செய்யாது - உரிய அதிகாரிகள் தம்மைப் புறக்கணிப்பதாக இந்தக் கிராம மக்கள் விசனப்படுகின்றனர். (31)

## சமூகத் தொண்டர்களுக்கு சைக்கிள்கள் கையளிப்பு

சமூக மட்டத்தில் வலுவிழந்தோரின் நலன் கருதி, அவர்களின் விபரங்களைத் திரட்டுவதற்கும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்குமாகப் பிரதேச செயலகங்கள் ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 150 தொண்டர்கள் தற்போது பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களின் போக்குவரத்துத் தேவைகருதி யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினர், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சைக்கிள்களை வழங்கி வருகின்றனர். அத்துடன் இந்த நிறுவனத்தினர் அவர்களின் கைச்செலவுகளுககாக மாதாந்தம் 500 ரூபாவையும் வழங்கி வருகின்றனர். (55)

## பாலர்பராமரிப்பு நூல் வெளியீடு

சுகாதார கல்வி ஆலோசகர் கா.வைத்தீஸ்வரனால் எழுதப்பட்ட பாலர் பராமரிப்பு என்ற நூல் நாளை மறுதினம் இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

நாளை மறுதினம் மாலை 4.30 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல்ககைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் தயாசோமசுந்தரம் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்.

# 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசிலில் 17 மாணவர்கள் தெரிவாகவுள்ளனர்

அரியாலை அபிவிருத்திச் சங்கம் ஆண்டு தோறும் நடைமுறைப்படுத்தும் தரம் 5 இற்கான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டுக்கு 17 மாணவர்கள் தெரிவாகவுள்ளனர்.

இந்தத் திட்டம் அரியாலையைச் சார்ந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த, படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு, பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்குக் கற்கை உபகரணங்கள் மற்றும் சீருடை, பாதணிகள் ஆகியவை வழங்கப்படுவதுடன் பிரத்தியேக பின்னூட்டல் வகுப்பும் நடத்தப்படும்.

மாணவர் தெரிவுக்கான பதிவுகள் டிசம்பர் 18,19 ஆம் திகதிகளில் காலை 10.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் மேற்கொள்ளப் படவுள்ளன.

பதிவு செய்யும் மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிககு அரியாலை - பார்வதி வித்தியாசாலையில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு உதவிப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யும் வைபவம் 01-01-2005 சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

# எம்.ஐ.35 ஹெலிகள்; விமானப் படைக்கு புதிய பலமா?



எம்.ஐ.35 ஹெலிகள் பயிற்சியில்

இலங்கை விமானப் படைக்குப் புதிதாக பத்து எம்.ஐ. 35 (Mil Mi - 35P) ரகத்தைச் சேர்ந்த ஹெலி கொப்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டு – தாக்குதல் ஹெலி கொப்டர்களின் பலம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்ப காலங்களில் பெல் 212 ஹெலி கொப்டர்களையே தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வந்த இலங்கை விமானப் படை 1995 ஆம்ஆண்டு தான் முதன் முறையாக – மரபு சார்ந்த தாக் குதல் ஹெலி கொப்டர்களை கொள்வனவு செய்தது.

பெல் - 212 ஹெலி கொப்டர்கள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவை. அவை போக்குவரத்துக்காகவே தயாரிக்கப் பட்டவை. இவற்றில் 12.7 மில்லி மீற்றர் இயந்திரத் துப்பாக்கிகளையும் (50 கலிபர்) சிறிய றொக்கட் மோட்டார்களையும் பொருத்தி விமானப்படை தாக்குதல்களுக்கு பயன்படுத்தி வந்தது.

ஆனால் மூன்றாம் கட்ட ஈழப்போர் அரசபடைகளைப் பெரிதும் நெருக்கடிக்குள் தள்ள மரபு சார்ந்த தாக்குதல் ஹெலி கொப்டர்களை அரசு பெற முயன்றது. ஆனால் அப்போதைய நிதி நெருக்கடி நிலையாலும் உடனடியாக இந்த ஹெலிகளை யுத்தங்களங்களில் பயன்படுத்துவதற்கான அனுபவம் விமானிகளுக்கு இல்லாததாலும் உக்ரேனிடம் இவற்றை குத்தகைக்கு பெற தீர்மானிக்கப்பட்டது.

1995 இல் நான்கு எம்.ஐ.24 V ரகத்தைச் சேர்ந்த தாக்குதல் ஹெலிகள் உக்ரேனிடம் நான்கு வருட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்பட்டன. இவற்றைச் செலுத்தும் விமானிகளும் ஆரம்பத்தில் உக்ரேனியர்களாகவே இருந்தனர்.

சண்டைக் களங்களில் இந்த ஹெலி கொப்டர்களின் தாக்குதிறன் விமானப் படைக்குத் திருப்தியளிக்கக் கூடிய வகையில் அமைந்ததால் எம்.ஐ.24 மற்றும் எம்.ஐ.35 ஆகிய ரகங்களைச் சேர்ந்த ஹெலிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு சமாதானத்துக்கும் முரண்பாட்டுக் கற்கைகளுக்குமான நிலையம் வெளியிட்ட இலங்கையின் படைபலம் குறித்த அறிக்கையில் விமானப்படையிடம் பெல் - 212 ரகத்தைச் சேர்ந்த 11 ஹெலிகளும், எம்.ஐ 24 V ரகத்தைச் சேர்ந்த 6 ஹெலிகளும், எம்.ஐ.35 ரகங்களைச் சேர்ந்த 2 ஹெலிகளும் இருப்பதாகக் குறிப் பிடப்பட்டிருந்தது.

இதன் படி ஹெலி கொப்டர் ஸ்குவாட் ரன் நான்காக வகைப்படுத்தப்பட்டி ருக் கின்றன.

முதலாவது – பிரமுகர்களுக்கான போக்குவரத்துக்குப் பயன்படும் பெல் 206, பெல் 412 (EP) ரகங்களை உள்ளடக்கிய 4 ஆவது ஹெலி கொப்டர் ஸ்குவாட்ரன். இது கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தை தாயகமாகக் கொண்டுள்ளது.

இரண்டா வது எம்.ஐ. 17 எம்.ஐ 2 17 I ரக இராட்சத துருப்புக் காவிகளை உள்ளடக்கிய 6 ஆவது ஹெலி கொப் டர் ஸ்குவாரட்ரன். இது வவுனியா விமானப்படைத்தளத்தை மையமாகக் கொண்டு இயங்குகிறது.

மூன்றாவது பெல் 206, பெல் 212 ஹெலிகளை உள்ளடக்கிய 7 ஆவது ஹெலி கொப்டர் ஸ்குவாட்ரன்

நான்காவது எம்.ஐ.24 ஏ எம்.ஐ 35 P. ஆகிய வற்றை உள்ள டக்கிய 9 ஆவது தாக்குதல் ஹெலி கொப்டர் ஸ்குவாட்ரன்கள் மின்னேரியா – ஹிங்கு ராங்கொட விமானப்படைத் தளத்தை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

விமானப் படையில் புதிதாக பத்து எம்.ஐ.35 P தாக்குதல் ஹெலி கொப்டர்களின் பலம் 24 ஆக அதிகரிக்கப்பட்டிருப்பதாக அண்மையில் வெளியான Srilanka's Military; the search foy a Mission என்ற நூலில் அமெரிக்க இராணுவ ஆய்வாளரான புளொட்கெட் குறிப்பிட்டிருந்தார்.

விமானப்படையைப் பொறுத்தவரையில் முன்னெப்போதும் இல்லாத தாக்குதல் பலத்துடன் இருக்கின்றதென்பது இதன் மூலம் தெளிவாகியுள்ளது.

சுமார் மூன்றாண்டுகள் கிடைத்த அமைதிக் காலத்தைப் பயன்படுத்தி விமானப்படையின் தாக்குதல் பலம் உச்சக் கட்டத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் – அதாவது எம்.ஐ.35 ரக ஹெலிகளின் அதிகரித்த பலம் மூலமாக விமானப் படையினால் அதிகளவு சாதகமான தன்மையை ஏற்படுத்த முடியுமா என்ற கேள்வியே இங்கு மேலோங்கியுள் ளது.

எம்.ஐ.35 ஹெலிகளை விமானப் படை கொள்வனவு செய்துள்ளது என்றவுடன் வாயைப் பிளந்தவர்கள் அநேகம் பேர்.

இதுவரை எம்.ஐ.24 தாக்குதல் ஹெலி கொப்டர்களைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருந்தவர்கள், எம் .ஐ.35 என்றவுடன் ஏதோ புதிதாக – வலுக்கூடிய ஹெலியை விமானப் படை கொள்வனவு செய்து விட்டதாக கருதினர்.

ஆனால் உண்மை நிலை அதுவல்ல. விமானப்படைக்கு இப்போது தான் எம்.ஐ. 35 ஹெலிகொப்டர்கள் கிடைத்ததென்பதோ – எம்.ஐ.24 P விட இது தாக்குதல் திறன் வாய்ந்ததென்பதே தவறான கருத்துக்களாகும்.

விமானப்படையிடம் முன்னர் இரண்டு எம்.ஐ. 35 ஹெலிகள் இருந்தன. இப்போது இதன் பலம் அதிகரிக்கப்பட்டி ருக்கின்றது என்பதே உண்மை. எம்.ஐ.35 பி தாக்குதல் ஹெலிகள் எம்.ஐ 24 ஐ விட எந்த வகையிலும் தாக்குத்திறன் கூடியவையல்ல.

எம்.ஐ.24 P/Hind - F ரக தாக்குதல் ஹெலிகளின் ஏற்றுமதிப் பெயர்தான் எம்.ஐ 35P என்ற ஹெலிகளாகும்.

இலங்கை விமானப் படையிடம் இப் போது எம்.ஐ.24 ரகத்தைச் சேர்ந்த 4 ஹெலிகளும் எம்.ஐ.24 P ரகத்தைச் சேர்ந்த 11; 10 ஹெலிகளும் எம். ஐ 35 P ரகத்தைச் சேர்ந்த



எம்.ஐ.24 V ஹெலி

10 ஹெலிகள் 9 ஆவது தாக்குதல் ஹெலிகொப்டர் ஸ்குவாட்ரனில் உள்ளன.

இந்த ஹெலிகளின் தாக்குத்திறனில் பெரியளவிலான வேறுபாடுகள் எதுவும் கிடையாது.

1990 களின் பிற்பகுதிகளில் சுமார் 2500 எம்.ஐ. 24 வகையும் அதைச் சார்ந்த ஹெலிகளும் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

இவற்றில் 700 ஹெலிகளை ரஷ்யா வைத்திருக்கிறது. எஞ்சியவை 48 நாடுகளிடம் இருக்கின்றன. இலங்கையைப் போன்றதொரு சிறிய நாட்டுக்கு 25 எம்.ஐ 24 ரக ஹெலிகள் என்பது பெரியதொரு படைபலம்தான்.

ஆனால் இவற்றைக் கொண்டு விமானப் படையால் புதிதாக எதையும் சாதிக்கமுடியுமா என்ற கேள்வியும் அதற்கு காணப் போகும் விடையும்தான் முக்கியமானவை.

இலங்கை விமானப்படை ஏற்கனவே எம்.ஐ.24 ரக ஹெலிகளில் ஏழுக்கும் குறையாதவற்றை இழந்திருக்கிறது. நாகர் கோவில், சரசாலை, கொக்கிளாய்.

தட்டுவன் கொட்டி, வவுனியா, திருகோணமலை, கட்டுநாயக்க என இவை இழக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றைவிட சேதமடைந்தவை பல. இப்படிப்பட்ட நிலையில் எம்.ஐ.24 ஹெலிகளோ அல்லது எம்.ஐ.35 ஹெலிகளோ எதிர்காலச் சமர்களில் புலிகளுக்குப் புதிதாகத் தலையிடியாக அமையப் போவதில்லை.

சோவியத் யூனியனால் 1969 இல் தயாரிக்கப்பட்ட இந்தவகை ஹெலிகள் 2 விமானிகள் மற்றும் 8 படையினரை ஏற்றிச்செல்லக் கூடியவை. அத்துடன் இந்த இரண்டு வகைக் ஹெலிகொப்டர்களிலும் பொருத்தப்பட்டிருப்பது 30 மி.மீ துப்பாக்கிகள்தான்.

அதைவிட ஏனைய தாக்குதல் சாதனங்கள், றொக்கட் மோட்டார்கள் ஆகியவற்றிலும் பெரிதாக எந்தவித்தியாசமும் கிடையாது. இதனால் புலிகளைப் பொறுத்தவரை- சண்டை ஒன்று வரும்போது புதியதொரு சிக்கலை எதிர்கொள்ளவேண்டிவராது.

ஆனால், முன்னரைவிட அதிக ஹெலிகளை விமானப்படை வைத்திருப்பதால் பரவலாகத் தாக்குதல்களை நடத்தும் திறன் விமானப்படைக்கு இருக்கிறது. ஆனால், இந்த வகை ஹெலிகளின் பலம் தாழப்பறந்து– இலக்குகளைத் தாக்குவதாக இருப்பதுதான் பெரும் பலவீனமாகும்.

ஏனெனில், இவற்றின் முன்பக்கக் கண்ணாடிகள் 7.62 ரக சாதாரண துப்பாக்கி ரவைகளுக்கு மட்டுமே கவசத் தடுப்பாக அமையக்கூடியவை.

இதனால் இயந்திரத் துப்பாக்கிகள், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளின் சூட்டுக்கு இவை இலகுவில் வீழ்த்தப் படும் நிலையில் உள்ளது. புலிகளைப்

பொறுத்தவரை முன்னரைவிட இப் போது பலம்பெற் றிருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

லெப்.கேணல்.ராதா விமான எதிர்ப்புப் படையணி என்ற படையணியை அவர்கள் தோற்றுவித்து – இந்தப் படையணியினரால் தான் எம்.ஐ.24 தாக்குதல் ஹெலிகள் முன்னர் சுட்டுவீழ்த்தப்பட்டிருந்தன.

தாழ்வாகப் பறந்து தாக்குதல் நடத்தும் திறன்வாய்ந்தவையாக இந்த எம்.ஐ.24, எம்.ஐ.35 ஹெலிகள் இரந்தபோதும், ஏவு கணைகளின் தாக்குதலில் இருந்து தப்பிக்கவே இவ்வாறு செயற்படுகின்றன என்பது முக்கியமானது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளிடம் இருந்து பாதுகாக்கும் சாதனங்களை இது கொண்டிருப்பதாகக் கூறப்பட்டாலும், வெப்ப ஈர்ப்பு ஏவுகணைகளிடம் இருந்து (Heat Sééking Missiles ) பாதுகாப்பு தேடும், மக்னீசியம் துகள்களைத் தூவும் மரபுசார்ந்த பாதுகாப்பு முறையைத்தான் இவை கொண்டிருக்கின்றன.

இதைவிட பெரிய பாதுகாப்பு சாதனங்கள் எதுவும் கிடையாது. ஆக உயரப்பறந்தால், இவை ஏவுகணைகளின் தாக்குதலுக்கு சுலபமாக இலக்காகிவிடும். புலிகளிடம் ஏவுகணைகள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தத்தக்க அளவு இருக்குமா என்பது சந்தேகமே.

ஆனால், புலிகளிடம் ராடரில் கண்காணித்து இயக்கப்படும் நவீனரக விமான எதிர்ப்புப் பீரங்கிகள் (Anti Air Craft Gun) இருப்பதில் எந்த சந்தேகமும் இல்லை. புலிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கிகளின் பலம் அண்மைக்காலத்தில் உயர்ந்திருப்பின் இந்தவகைத் தாக்குதல் ஹெலி பெரும் சிக்கலை எதிர்கொள்ளும்.

இதைவிட தாழப்பறந்து தாக்குதல்களை நடத்துவதால் இலகுவில் சுட்டுவீழ்த்தப்படத் தக்க இந்தவகைக் ஹெலிகள், பெருமளவில் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படும் போது, இவை தாக்குதலுக்குள்ளாகும் சந்தர்ப்பங்களும் அதிகமாகும்.

ஆக மொத்தத்தில் விமானப்படை தனது ஹெலிகொப்டர் தாக்குதல் ஸ்குவாட்ரனை புதிய ஹெலிகொப்டர்கள் மூலம் நிரப்பியிருந்தபோதும், இன்னொரு போர் ஏற்பட்டால் அதன்மூலம் அதிக பயன்பெற்றுவிடலாம் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறுமா என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாகப் புலிகள்தான் இருந்துகொண்டிருக்கின்றனர்.



எம்.ஐ.ஹெலிகளுக்கு சவாலான விமான எதிர்ப்பு பீரங்கி.

# ஏதென்ஸ் பஸ் பயணிகள் கடத்தல் 18 மணிநேரத்துக்குபின் விடுவிப்பு




(ஏதென்ஸ்)

கிறீஸ் தலைநகர் ஏதென்ஸில் பஸ்ஸில் பயணஞ்செய்த 23 பயணிகளை இரண்டு ஆயுதபாணிகள் கடத்திய சம்பவம் முடிவுக்கு வந்ததுடன், பயணிகளும் எவ்வித பாதிப்புமின்றி விடுதலை செய்யப்பட்டதுடன் இரண்டு கடத்தற்காரர்களும் பொலிஸாரிடம் சரணடைந்தனர்.

நேற்றுமுன்தினம் ஏதென்ஸில் பயணிகள் பஸ்ஸை இரண்டு ஆயுததாரிகள் நிறுத்தி ஆயுதமுனையில் கடத்தியவேளை அந்த பஸ்ஸின் சாரதியும், சிட்டைப் பரிசோதகரும் மற்றும் ஒரு பெண்ணும் தப்பிச்சென்றனர்.

இந்த நிலையில் கடத்தற்காரர்கள் தனியார் தொலைக்காட்சி நிருபருடன் கையடக்கத் தொலைபேசியில் உரையாடினர். இதன்போது நேற்றுக் காலைக்குள் பஸ்ஸிற்கு ஒரு சாரதியை அனுப்பி ஏதென்ஸ் விமான நிலையம் வரை பஸ்ஸை கொண்டு செல்ல வேண்டுமெனவும், அங்கு ரஷ்யா செல்ல ஒரு விமானத்தை தயார் செய்ய வேண்டுமெனவும் 35 இலட்சம் பணத்தை தரவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறு இந்தச் சம்பவம் சிக்கலை ஏற்படுத்திய நிலையில், பயணிகளை உயிருடன் மீட்பது குறித்து பொலிஸார் தீவிர ஆலோசனை நடத்தினர். பிரசல்ஸ் நகரில் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் மாநாட்டில் கலந்து கொள்ளவிருந்த கிறீஸ் பிரதமர் கோஸ்மல் காரமான்லிஸ் தனது பயணத்தை தாமதமாக்கினார்.

இந்த நிலையில் கிறீஸ் பொலிஸ் மா அதிபர் ஜோர்ஜ் ஏஞ்சலாசாஸ் சம்பவ இடத்திற்கு விரைந்தார்.அப்பொழுது பஸ்ஸில் பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்த 14 பேரைக் கடத்தற்காரர்கள் விடுதலை செய்தனர். முதலில் 5 பயணிகளும், அதன் பின்னர் 9 பயணிகளும் விடுதலை செய்யப்பட்டனர். இதனால் கடத்தற்காரர்கள் என்ன மனநிலையில் இருக்கிறார்கள் என்பதை கண்டறிய முடியாமல் பொலிஸார் திக்குமுக்காடினர்.

விடுதலைசெய்யப்பட்ட பயணிகளிடம் விசாரித்த போது கடத்தறகாரர்கள் 2 துப்பாக்கிகள் வைத்திருப்பது உறுதி செய்யப்பட்டது. வேறு வெடிபொருட்கள் வைத்திருக்கும் தகவலை அவர்களால் உறுதி செய்ய முடியவில்லை.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் பஸ்ஸில் எஞ்சியிருந்த 6 பயணிகளும் விடுதலை செய்யப்பட்டனர். முதலில் 4 பெண்களும் அவர்களைத் தொடர்ந்து 2 ஆண்களும் பஸ்ஸை விட்டு கீழே இறங்கினர். அவர்கள் அனைவரும் தலைக்கு மேல் கைகளை உயர்த்திக் கொண்டு பொலிஸாரை நோக்கிச் சென்றனர்.

இதையடுத்து அதிரடிப்படைப் பொலிஸார் உடனடியாக பஸ்ஸை முற்றுகையிட்டனர். அங்கு கடத்தற்காரர்கள் 2 பேரும் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் துப்பாக்கிகளை ஒப்படைத்துவிட்டு பொலிஸாரிடம் சரணடைந்தனர். இதனால் 18 மணிநேர போராட்டம் எந்தவித உயிர்ச்சேதமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது.

கடத்தல்காரர்கள் முதலில் மொஸ்கோவுக்குச் செல்ல விமானம் ஏற்பாடு செய்யும்படி கூறினார்கள். இதனால் அவர்கள் ரஷ்யர்கள் என்று பொலிஸார் சந்தேகித்தனர்.

ஆனால், பொலிஸாரிடம் சரணடைந்த 2 கடத்தற்காரர்களும் அல்பேனியாவை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. அவர்கள் எதற்காகப் பஸ்ஸைக் கடத்தினர் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

## ஈராக் தொடர்பாடல் அமைச்சக உயர் அதிகாரி சுட்டுக்கொலை!

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் மத்திய பகுதியில் கிளர்ச்சிவாதிகள் நேற்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்நாட்டு தகவல் தொடர்பு அமைச்சகத்தைச் சேர்ந்த முக்கிய உயர் அதிகாரி கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் பணிப்பாளர் நாயகமும், ஈராக்கிய இடைக்கால அரசின் சிரேஷ்ட ஆலோசகருமான காசிம் இம்காவி எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் ஈராக்கின் மேற்குப் பகுதி நகரொன்றிலிருந்து, பாக்தாத் நோக்கிக் காரில் பயணம் செய்துகொண்டிருந்தவேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்திற்கு பின்னர் கருத்து தெரிவித்த ஈராக்கிய இடைக்கால பிரதமர் இயட் அலாவி - அடுத்தமாதம் ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தலை குழப்பும் வகையில் கிளர்ச்சிவாதிகள் தமது தாக்குதல்களை அதிகரிக்கலாம் என எச்சரிக்கை கலந்த தொனியில் தெரிவித்தார்.

## கொலம்பிய பார்க் அமைப்பின் சிரேஷ்ட தலைவர் கைதானார்



(லண்டன்)

கொலம்பிய பார்க் தீவிரவாத அமைப்பின் அதி உயர் தலைவர்களுள் ஒருவரான றொற்றிக்கோ கிறான்டா - கொலம்பியப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட கிறான்டாவைப் பார்க் தீவிரவாதிகளின் 'வெளிநாட்டு அமைச்சர் என கொலம்பிய' அதிகாரிகள் வர்ணித்துள்ளனர்.

கிறான்டாவை கொலம்பியாவுக்கும் - வெனிசுலாவிற்கும் இடையேயான எல்லையில அமைந்துள்ள ககூட்டா நகரத்தில் வைத்துப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர் கடந்த 10 ஆண்டுகளில் உலகின் 16 நாடுகளுக்கு விஜயம்செய்து பார்க் அமைப்பின் கூட்டமைப்பினை வெளிநாடுகளில் நிலைநாட்டுவதற்கும் அந்நாட்டு அரசாங்கங்களுடன் இராஜதந்திர உறவுகளை வைத்துக்கொள்வதற்காகவும் கடுமையாக உழைத்தவரென கொலம்பிய தேசிய பொலிஸ் படையின் அதிகாரியான ஜோர்ஜ் டயானியல் கஸ்ரோ தெரிவித்தார்.

குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கொலம்பியாவினது நற்பெயரைக் கெடுக்கும் வகையில் பாரிய பிரசாரங்களை மேற்கொண்டுவந்துள்ளார் எனவும் கஸ்ரோ தெரிவத்தார். இவர் கைதுசெய்யப்பட்டு விலங்கிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்படுகையில் - 'பார்க் அமைப்பு நீடூழி வாழ்க', 'எம் தலைவர் மனுவல் மருலண்டா வாழ்க' எனக் கோஷமிட்டதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதே சமயம் பார்க் அமைப்பின் மற்றுமொரு சிரேஷ்ட கட்டளைத் தளபதியான எர்மிசன் கபிரோராலினையும் கைதுசெய்துள்ளதாகக் கொலம்பியப் படைகள் தெரிவித்தன. கைதுசெய்யப்பட்டுள்ள கபிரோரா பார்க் அமைப்பின் தென் பிராந்தியத் தளபதியான பபியன் ரமிறேசின் சகோதரர் என கொலம்பியப் படையினர் தெரிவித்தனர்.

இவர் போதைப் பொருட் கடத்தல் தொடர்பாகக் கொலம்பியப் பொலிஸாரால் நீண்ட காலமாகத் தேடப்பட்டுவந்தவராவார்.

அண்மைய காலங்களாக கொலம்பிய அரசாங்கம் அமெரிக்காவின் ஆதரவுடன் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## ஹெயிட்டியின் முன்னாள் படையினர் கைவிடப்பட்ட அரிஸ்டைட்டின் இல்லத்தில் முகாம் அமைப்பு!



ஹெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த அரிஸ்டைட்டைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு உதவிபுரிந்த அந்நாட்டின் முன்னாள் படையினரில் ஒரு தொகுதியினர் கைவிடப்பட்ட நிலையிலிருந்த அரிஸ்டைட்டின் இல்லத்தில் முகாமிட்டுள்ளனர்.

அந்த வீட்டில் தங்கியுள்ள படையினரின் தலைவர்களில் ஒருவரான றவிக்ஸ், தாம் அந்த வீட்டை தமது தலைமையகமாக மாற்றப்போவதாகத் தெரிவித்தனர்.

ஆனால், முன்னாள் படையினரின் இந்த நடவடிக்கையைக் கண்டித்துள்ள ஹெயிட்டி அரசாங்கம், ஐ.நாவுடன் இணைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணவுள்ளதாகவும தெரிவித்துள்ளது. முன்னாள் அதிபர் அரிஸ்டைட்டின் ஆதரவாளர்கள் இந்த நகரத்தில் வன்செயல்களில் ஈடுபட்டுவருவதாகவும், எனவே, இந்த வன்செயலைக் கட்டுப்படுத்தத் தாம் உதவிசெய்யவுள்ளதாகவும் இந்தப் படையினர் தெரிவித்தனர்.

சுமார் 50 தொடக்கம் 100 பேர் வரையான முன்னாள் படையினரே இங்கு தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்த வீட்டில் தாம் தங்கியிருப்பதற்கான அனுமதியை அந்த மாவட்டத்தின் மேயரிடமிருந்து பெற்றுள்ளதாகவும் றவிக்ஸ் தெரிவித்தார்.

ஹெயிட்டியில் நடைபெற்றுவரும் வன்செயல்களை அந்நாட்டுப் பொலிஸார் கட்டுப்படுத்த முடியாமல் திணறிவருவது கடந்த மூன்று மாதத்தில் நிரூபணமாகியுள்ளதாகவும் - எனவே, வன்செயல்களைக் கட்டுப்படுத்த தாம் உதவிசெய்வதாகவும் இந்தக் குழுவினர் தெரிவித்தனர்.

ஆனால், முன்னாள் படையினரின் இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளமுடியாதெனவும் - எனவே, இதற்குத் தீர்வுகாணப்படவேண்டுமெனவும் ஐ.நாவின் பேச்சாளர் டேமியன் ஒன்செஸ் - காடோனா தெரிவித்தார்.

## உலக நோக்கு

## 17 ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு பலஸ்தீனத்தில் ஹமாஸ் இன்று நடத்தவிருந்த பாரிய ஊர்வலத்தை திடீரென இரத்துசெய்தது!



(டெல்அவிவ்)

பலஸ்தீன ஹமாஸ் அமைப்பு தமது 17 ஆவது ஆண்டு நிறைவான இன்று பெரியளவிலான ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்தபோதும், அந்த ஆர்ப்பாட்டத்தைத் திடீரென இரத்துச் செய்துள்ளது.

இந்த ஊர்வலம் வீதிவழியாகச் சென்று காஸாவிலுள்ள மிகப்பெரிய விளையாட்டு மைதானத்தில் நிறைவடைவதாக இருந்தது. இதற்காக அந்த மைதானத்தில் இருந்த கதிரைகள் முழுவதும் அப்புறப்படுத்தப்பட்டதுடன், மைதானத்தைச் சூழவுள்ள பகுதி மதில்களில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

ஆனால் இந்த மிகப்பெரிய ஊர்வலத்தை இரத்துச் செய்த பின்னர் கருத்துத் தெரிவித்த ஹமாஸ் அமைப்பின் பேச்சாளர் முசீர் அல் - மாஸ்ரி - இந்த ஊர்வலம் நடத்தப்பட்டால், கடந்த ஞாயிற்றுக்கிழமை, 5 இஸ்ரேல் படையினர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இஸ்ரேல் தாக்குதலை நடத்தக்கூடும் என்பதனாலேயே இந்த ஊர்வலம் இரத்துச் செய்யப்பட்டதெனத் தெரிவித்தார்.

அத்துடன் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் தமது அமைப்பின் தலைவர்கள் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாமெனவும், எனவே அவர்களின் பாதுகாப்பைப் பேணும் வகையிலேயே இந்த ஊர்வலம் இரத்துச்செய்யப்பட்டதெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேல் படையினர் மீதான தாக்குதலை அடுத்து, அப்பகுதிக்கான பாதையைப் போக்குவரத்துக்கு மூடியிருந்த படையினர் இதுவரை அந்தப் பாதையை மீளத்திறக்கவில்லை.

இதனிடையே நேற்று நெற்சாறிம் குடியிருப்புப் பகுதியில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலஸ்தீனப் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

தானும், சகோதரனும் காரொன்றில் வேகமாகப் பயணம் செய்துகொண்டிருந்தவேளை இஸ்ரேல் படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும், இதன்போது தனது சகோதரன் கொல்லப்பட்டதாகவும், உயிரிழந்தவரின் சகோதரி தெரிவித்தார்.



ஆனால், தமது இராணுவ வலயத்திற்கு அருகால் காஸாவை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருந்த காரை நோக்கி தமது படையினர் எச்சரிக்கை வேட்டுக்களையே தீர்த்ததாகவும், எவர்மீதும் இலக்குவைத்துத் தாக்குதல் நடத்தப்படவில்லை எனவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. இந்தத் தாக்குதலில் மற்றுமொருவரும் படுகாயமடைந்து ஆபத்தான நிலையிலுள்ளார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் காஸாவின் சர்வதேச விமானநிலையத்திற்கு அருகில் பலஸ்தீனப் பொலிஸ் அதிகாரியொருவர் இஸ்ரேல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் காஸாப் பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய மோட்டார் தாக்குதலில் தாய்லாந்து பணியாளர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அந்திரெக்ஸ் கிருமி பீதியால் நோர்வே தூதரகம் மூடப்பட்டது!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்துக்கு அநாமதேயத் தபாலில் வெள்ளை நிறத்தூள் வந்ததை அடுத்து தூதரகம் இழுத்து மூடப்பட்டது.

அந்திரெக்ஸ் பீதியிலேயே தூதரகம் உடனடியாக மூடப்பட்டதாகவும், ஆனால் கடிதத்தில் வந்த மர்மத்தூள் கிருமித்தூளாக இருக்க வாய்ப்பில்லை என்றும், எனினும் முற்பாதுகாப்புக்காகவே தூதரகம் மூடப்பட்டதாகவும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகமும் இதேபோன்று - அந்திரெக்ஸ் பீதியால் சில மாதங்களுக்கு முன்னர் மூடப்பட்டு பின்னர் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளுக்கு ஆதரவாக...

தான இரண்டு கட்சிகளிடையேயும், வேறுபாடுகள் உள்ளன. ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன தமது நாட்டிலுள்ள பல்லின சமூகங்கள் தொடர்பில் வேறுபாடான ஒழுங்கமைப்பின் மூலமே ஜனநாயகத் தீர்வைக் கண்டுள்ளனர்.

எனவே எமது இந்த வேறுபாடுகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது வெளிப்படும். ஆனால் தீர்வென்பது இறுதில் பொதுமக்களுக்கு விடப்பட்டு பொதுஜன வாக்கெடுப்பின் மூலமே எட்டப்படும்.

நாம் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாராகவே உள்ளோம். ஆனால் விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் அல்ல. இவர்களின் இந்த தன்னாட்சி அதிகாரசபை தனிநாட்டுக்கான முன்மொழிவே என சுதந்திர ஆய்வாளர்கள் தெளிவாக தெரிவித்துள்ளனர்.

உங்களது நாடுகளில் ஜனநாயகம் பல்லிணக்கத்தன்மை வாய்ந்ததாக இருப்பதற்கு காரணம், உங்களது நாடாளுமன்றிலும், வீதி ஆர்ப்பாட்டங்கள் மூலமும் இது நிலைநிறுத்தப்படுகின்றது. இது ஒரு வழிமூலம் உங்கள் நாட்டில் நிலைநிறுத்தப்படுவதில்லை ஆனால் இலங்கையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு தவிர்ந்த பிற பிரதேசங்களில் ஜனநாயகம் நிலவி வருகின்றது. எங்களது முன்னணி தொடர்ந்தும் ஆரோக்கியமான வழியில் வேறுபாடுகளைக் கொண்டிருக்கும்.

உண்மையாகவே சமாதானப் பேச்சுவார்த்தை எம்மால் நின்று போகவில்லை. அது விடுதலைப் புலிகளாலேயே நின்று போனது.

சமாதான முயற்சிகளுக்கும், சுதந்திரமான தேர்தலுக்குமான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு நாம் எமது கதவுகளை திறந்தே வைத்துள்ளோம். அத்துடன் உங்களது விமர்சனங்கள் தொடர்பாகவும் எந்த இடத்திலும் கலந்துரையாட எமது கதவுகள் முற்றாகத் திறந்தே உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய சட்ட நிபுணருக்கு

# கொழும்புக்கு வரக் கூடாதென தொலைபேசி மூலம் எச்சரிக்கை

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்ட சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட தானு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை அடையாளம் காண்பதற்காக கொழும்பிற்கு அழைக்கப்பட்ட இந்திய நீதித்துறை சட்ட வல்லுநரான பேராசிரியர் சந்திரசேகரன் இலங்கைக்கு வர மறுத்துள்ளார்.

பேராசிரியர் சந்திரசேகரன் இலங்கைக்குச் சென்றால் கொலைசெய்யப்படுவார் என அவரது கைத்தொலைபேசிக்கு புதுடெல்கியில் இருந்து கிடைக்கப்பெற்ற அச்சுறுத்தலையடுத்தே அவர் இலங்கைக்கு வர மறுத்துள்ளார்.

புதுடெல்கியில் உள்ள தொழிலதிபர் எனத் தன்னை அறிமுகப்படுத்திய நபர், தான் கொழும்பில் உள்ள நண்பர் ஒருவரது கட்டளைக்கு அமைவாகச் செயற்படுவதாகவும் தெரிவித்த குறிப்பிட்ட நபர் இலங்கைக்கு செல்ல வேண்டாமென பேராசிரியர் சந்திரசேகரன் 3 தடவை எச்சரித்துள்ளார்.

எனவே தான் இலங்கைக்கு வர முடியாது எனத் தெரிவித்துள்ள பேராசிரியர் சந்திரசேகரன் குறிப்பிட்ட ஆவணங்களை பெங்களூருக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவித்தார்.

## இந்தோனேசிய மீனவர் திருகோணமலையில் மீட்பு!

திருகோணமலை கடற்பரப்பில் சீரற்ற காலநிலை காரணமாக தத்தளித்துக்கொண்டிருந்த 4 இந்தோனேசிய மீனவர்கள் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர். இந்த மீனவர்கள் எழுப்பிய அவலக்குரலையடுத்து அங்கு விரைந்த கடற்படையினர் அவர்களை படகுடன் மீட்டெடுத்து கரைக்கு கொண்டுவந்தனர்.

## இசை....

சுயாதீன ஊடகவியலாளர் சங்கத்தினால் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றிய சுயாதீன ஊடகவியலாளர் சங்க இணைப்பாளர் சுனந்த தேசப்பிரிய கருத்துத் தெரிவிக்கையில்-

சம்பவ தினத்தன்று ஊடகவியலாளர் லங்கா ஜயசுந்தர கொல்லப்பட்டதுடன், இந்திய கலைஞர்களின் நிகழ்ச்சி குழப்பப்பட்டது கண்டிக்கத்தக்கது. அத்துடன், பொலிஸார் கலகத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாக விடுவித்திருக்கக்கூடாது. மத அடிப்படைவாதிகளுக்கும் இடமளிக்கக் கூடாது எனத் தெரிவித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவும் கலந்து கொண்டார்.

## காணாமற்போன கடற்படையினர் தளம் திரும்பியுள்ளனராம்!

பொலநறுவை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த சமயம் காணாமற்போனதாகக் கருதப்பட்ட கடற்படைச் சிப்பாய்கள் உட்பட 22 பேரும் நேற்று கண்டுபிடிக்கப்பட்டனர்.

திருகோணமலை கடற்படைத்தளத்திலிருந்து இரண்டு படகுகளில் மீட்புப் பணிகளுக்காக 11 கடற்படைச் சிப்பாய்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

சோமாவதி விகாரைப் பிரதேசத்தில் கடமையிலிருந்த 6 பொலிஸ் கொன்ஸ்டபிள்களையும், 5 பொதுமக்களையும் மீட்டுக்கொண்டு நேற்று முன்தினம் திரும்பியபோது, இவர்களுடைய தொடர்புகள் துண்டிக்கப்பட்டதையடுத்து காணாமற்போய் விட்டதாகக் கருதப்பட்டனர்.

நேற்று இவர்கள் திரும்பியுள்ளார்கள். இவர்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டமைக்குக் காரணம் தொலைத்தொடர்புக் கருவிகளின் பற்றறிகள் சார்ஜ் இறங்கியமையால் அவை இயங்காமற்போனதே காரணமென தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## இந்திய...

இரு நாட்டு கூட்டுக்கடற்படைப் பயிற்சி இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது இந்தியத் தூதுவர் நிருபமா ராவ், இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் இந்த கூட்டுப்பயிற்சியை முன்னிட்டு மேற்குக் கடற்பிராந்தியத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தப் பயிற்சியை பார்வையிட உள்ளூர் செய்தியாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தும் இறுதி நேரத்தில் முடிவு மாற்றப்பட்டு கப்பல் ஒன்றில் உள்ளூர் பத்திரிகையாளர்கள் சிலர் அழைத்துச் செல்லப்பட்டு பார்வையிட அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளுடன்...

மாகாண செயலர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாக மேற்கொண்டால் யுத்தம்வராது, பிரிவினையும் வராது.

இத்தகைய பணிகளில் மாகாண அதிகாரிகள் முழுமூச்சுடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## மூன்று மணி நேரம் பேசியும்...

இதையடுத்து கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய சொல்ஹெய்ம் - நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதியைச் சந்தித்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், நேற்றுக்காலை 8.30 மணியளவில் அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த எரிக் சொல்ஹெய்ம், பின்னர் 10 மணியளவில் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பு சுமார் மூன்று மணிநேரம் நீடித்தது. இந்தச் சந்திப்பின்போது - நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய சந்திப்பு குறித்தும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எரிக் சொல்ஹெய்ம் விரிவாக எடுத்துக்கூறினார்.

புலிகள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர். மாவீரர்நாள் உரையில் கூறப்பட்ட நிலைப்பாட்டையே நேற்றுமுன்தின சந்திப்பிலும் வலியுறுத்தினர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை சரியான முறையில் முன்கொண்டு செல்வதற்கு புலிகள் உறுதியளித்துள்ளனர் எனத் தெரிவித்த சொல்ஹெய்ம் -

புரிந்துணர்வு உடன்படிக்கை, கிழக்கு நிலைமை, வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா, ஒஸ்லோவில் 2002 டிசம்பர் 2 ஆம் திகதி - ஆலோசனைக்காக இணங்கிக்கொள்ளப்பட்ட, இறுதித்தீர்வின் அடிப்படையில் இடைக்கால நிர்வாகம் குறித்து பேச்சு நடத்தவே தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

அரசாங்கம் இறுதித் தீர்வுடன் இணைந்தே இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேச்சு நடத்தத் தயார் என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

பேச்சுக்கள் இடம்பெறாத சூழலில், இருதரப்பும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைத் தவிர்க்கவேண்டும் என்றும் சொல்ஹெய்ம் கேட்டுக் கொண்டார்.

இருதரப்பையும் சந்தித்துப் பேசியதில் எந்தவித முன்னேற்றமும் காணாத எரிக் சொல்ஹெய்ம் வெறுமகையுடன் நேற்றிரவு நோர்வே பயணமானார்.

இவர் இந்தியா ஊடாக நோர்வே திரும்புகின்ற அதேவேளை, இந்தியாவில் எந்தச் சந்திப்பிலும் பங்கு பற்றமாட்டாரென தூதரகத் தகவல்கள் தெரிவித்தன.

ஒஸ்லோவில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியபின் 20 ஆம் திகதி லண்டனுக்குப் பயணமாவார் எனத் தெரியவருகிறது.

## இந்திய - இலங்கை...

தனது 50 ஆவது வயதில் போராட்டத்தில் இணைந்து கடந்த 18 வருடங்களாக என்னோடு சேர்ந்து பல வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தவர். தமிழீழ மக்களுக்கும், கடற்புலிகளுக்கும் உறவுப் பாலமாகச் செயற்பட்டவர் எனவும் தெரிவித்தார்.

முன்னதாக லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் சொந்த இடமான தாளையடியில் கடற்புலிகளின் மாவீரர் பணிமனையைச் சேர்ந்த சுதர்சன் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோர் ஏற்றினர்.

ஈகச்சுடரினை மறவன் மாஸ்ரரின் துணைவியார் ஏற்றினார். காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், கடற்தொழில் சமாசத்தைச் சேர்ந்த சூரியகுமார் ஆகியோர் வித்துடலுக்கு மலர்மாலையை அணிவித்தனர்.

இதன்பின்னர் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை மற்றும் அந்தோனிஸ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதனைத் தொடர்ந்து வித்துடல் படை அணிகளின் இராணுவ மரியாதையுடன் மாலை 5 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(122,21)

UNIT
DELL'S INTRODUCTORY OFFER
நீங்களும் உலகின் முன்னணி கணனி உபயோகிப்பாளர்களில் ஒருவராகப் போகிறீர்கள் உலகில் நம்பர் 1 கணனிகள் என்று அங்கீகரிக்கப்பட்ட DELL கணனி உதிரிப்பாகங்களை தாயக மண்ணில் எங்கள் 3 வருட முழு உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கொழும்பு விலையை ஒத்து பெற்றுக் கொள்ளலாம்.
UNIT is unique for your feature
நடக்குமா என்றார்கள்??? நடந்து விட்டது! ஆம் நடந்து விட்டது!
World No. 1 DELL Monitors @ Local Rate
உலகத்தரம்வாய்ந்த Perx இன வகை வகையான Wooferகள் மற்றும் Casing கண்காட்சியும் விற்பனையும்
கொழும்பு விலையை ஒத்து
Big Woofer Mela & Show





பலகோடி இந்திய மக்களால் அங்கீகரிக்கப்பட்ட நாங்கள் பின் உலமெங்கும் உள்ளவர்களால் அங்கீகரிக்கப்பட்டோம். எப்படி?
1. தரம் 2. நம்பிக்கை 3. உங்கள் கையிருப்பிற்குள் அடங்கிய சேவை 4. எங்களுக்கேயுரிய தொழில்நுட்ப பட்டறிவு மற்றும் தனித்தன்மை 5. தரச்சான்றிதழ்கள் 6. கணனித்துறையில் இந்திய பொறியியல் பட்டம் 7. 2 தசாப்தகால கணனி அனுபவம் என்னும் பல... → We are entirely different from others
புதுமை, தொழில்நுட்பம் என்பவற்றை பார்த்து பயப்படுபவர்களல்ல நாங்கள்... அவை பழக்கப்பட்டவை.
தங்கம் என்றால்கூட உரசிப் பார்த்தால்தான் தெரியும் எங்களையும் ஒருதரம் பரீட்சித்துப் பாருங்களேன்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna, Sri Lanka.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.